# வைப்பகம்

2022 ஏப்பிறல் - யூன் மலர் 7 இதழ் 04 - 06

அறிவுத் தேடலின் மையம்

ரூ. 20/-


02 உலகளாவிய பங்குப் பரிவர்த்தனைகளின் பரிணாம வளர்ச்சியும் இலங்கையின் அனுபவமும்

13 இலங்கையில் காலநிலை அதிர்வுகளை எதிர்கொள்வதற்கான அனர்த்த மீட்புக் கடன் திட்டம்

21 நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உந்துசக்தி: உலகளாவிய பின்னணியில் இலங்கையை நிலைப்படுத்தல்

31 இலங்கையில் படுகடன் நிலைபெறுதன்மையும் பொருளாதார வளர்ச்சியும்


ISSN 2513-3012

இலங்கை மத்திய வங்கி
தொடர்பூட்டல் திணைக்களம்

இக்கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் எழுத்தாளர்களின் கருத்துக்களேயன்றி அவை இலங்கை மத்திய வங்கியின் கருத்துக்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை

ஆண்டுச் சந்தா (அஞ்சல் கட்டணம் உட்பட): ரூ.320/-

# உலகளாவிய பங்குப் பரிவர்த்தனைகளின் பரிணாம வளர்ச்சியும் இலங்கையின் அனுபவமும்

செல்வி பி. உபேகா பெரேரா
உதவிப் பணிப்பாளர்
பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம்

## அறிமுகம்

பங்குப் பரிவர்த்தனை[1] என்பது கம்பனியொன்றின் பங்குரிமை மூலதன வர்த்தகத்தை வசதிப்படுத்துகின்ற முறைசார்ந்த அமைப்பு அல்லது உட்கட்டமைப்பு என வரைவிலக்கணம் செய்யப்படலாம். அடிப்படையில் இது பௌதீக ரீதியான அல்லது மெய்நிகரான இடமாகும். இங்கு பகிரங்கமாக வர்த்தகம்செய்யப்படும் கம்பனிகளின் சொத்தாண்மைக் உரிமைக்கோரிக்கைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பங்குகளை முதலீட்டாளர்கள் வாங்குகின்றனர் மற்றும் விற்கின்றனர். பங்குப் பரிவர்த்தனையில் பங்கேற்பவர்கள் சிறிய தனிப்பட்ட முதலீட்டாளர்கள் தொடக்கம் நிதியியல் நிறுவனங்கள், ஓய்வூதிய நிதியம், காப்புறுதி நிதியங்கள், காப்பு நிதியங்கள் போன்ற பாரிய நிறுவனசார் முதலீட்டாளர்கள் வரை வேறுபடுகின்றனர். பங்குச் சந்தையின் முதன்மைக் குறிக்கோள் வர்த்தக விரிவுபடுத்தல் மற்றும் புத்தாக்கம் என்பவற்றுக்குப் போதிய மூலதனத்தைத் திரட்டுவதனூடாக வியாபாரங்கள் வளர்ச்சியடைவதை இயலச்செய்வதாகும். வினைத்திறன்மிக்கவாறு நிதிய ஒதுக்கீடுகளை வசதிப்படுத்துவதன் வாயிலாக நவீன உலகப் பொருளாதாரத்தை முக்கியமாக செலுத்துபவைகளில் ஒன்றாக பங்குப் பரிவர்த்தனைகள் உருவெடுத்துள்ள அதேவேளை முதலீட்டாளர்கள் அவர்களின் விருப்பத்திற்கேற்ப பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டுத் தொகுதிகளிலிருந்து ஆதாயங்களை ஈட்டுவதை இயலச்செய்கின்றன.

1 பங்குச் சந்தை (அல்லது பங்குரிமை மூலதனச் சந்தை) என்ற சொற்பதம் பல எழுத்தாக்கங்களில் இடைமாற்றலாக பயன்படுத்தப்படுவதுடன் ஒரே மாதிரியான அர்த்தத்தைக் கொண்டதாக கொள்ளப்படுகின்றது. எவ்வாறாயினும், பங்குச் சந்தை என்ற சொற்பதம் பொதுவாக குறித்த ஒரு புவியியற் பிராந்தியத்தில் அல்லது நாட்டில் வர்த்தகப்படுத்தப்படுகின்ற அனைத்துப் பங்குகளையும் குறிப்பிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற பல கருத்துக்களைக் கொண்ட ஒரு சொற்பதமாகும்.

## பங்குச் சந்தைகளின் தோற்றுவாய்

முறைசார்ந்த பங்குப்பரிவர்த்தனைகளின் தோற்றுவாய் 17ஆம் நூற்றாண்டை விடவும் பின்னோக்கி அறியக்கூடியதாக இருப்பினும், மூலதனச் சந்தைகளின் அடித்தளங்கள்[2] 12ஆம் நூற்றாண்டு வரை பின்னோக்கிய காலத்தினைக் கொண்டனவாகும். பங்குச் சந்தை உருவாகுவதற்கு அடித்தளமிட்ட பல நிதியியல் கண்டுபிடிப்புகளில் முன்னோடியாகயிருந்தவர்கள் ஐரோப்பியர்களே குறிப்பாக ஒல்லாந்தர்களேயாவர். முறைசார்ந்த பங்குப் பரிவர்த்தனைகள் உருவாகுவதற்கு முன்னரே பங்கு மாற்றகம் அல்லது பரிவர்த்தனை போன்றன அன்ட்வேர்க் போன்ற டச்சு மொழிபேசும் நகரங்களில் கருத்துருவாக்கம் பெற்றன. 1500களில் பரிவர்த்தனைகள் வாக்குறுதிப் பத்திரங்களையும் முறிகளையும் மாத்திரம் கையாண்டபோதிலும், கடல் பயணங்களூடாக கிழக்கிலிருந்து பொருட்களைக் கொண்டுவந்த கம்பனிகளுக்கு ஏற்படுகின்ற இடர்நேர்வுகளைப் பகிர்ந்துகொள்ள அவை விரும்பியதால் 1600களில் இலாபத்தைக் பகிர்கின்ற எண்ணக்கரு விரிவடைந்தது. அதீத இலாபகரமிக்கதானதாகக் காணப்பட்ட இக்கடற்பயணங்கள் கடற்கொள்ளையர்களின் தாக்குதல்கள் மற்றும் மோசமான வானிலைகளைக் கொண்ட ஆபத்துகள் நிறைந்தவையாகக் காணப்பட்டன. இதனால் கப்பல் உரிமையாளர்கள் இடர்நேர்வுகளைப் பகிர்வதற்கு விரும்பினர். இது முதலீட்டாளர்களுக்கு பங்குகளை வழங்கிய கிழக்கிந்திய கம்பனிகளின் உருவாக்கத்திற்கு வழிவகுத்தது. இப்பங்குகள்

2 மூலதனச் சந்தைகள் என்பது பரந்த எண்ணக்கருவாகும் என்பதுடன் பொதுவாக மூலதனம் தேவைப்படுகின்றவர்களுக்கு நிதியங்களை வழிப்படுத்துவதை நோக்காகக் கொண்ட நிதியியல் முறைமையின் ஏதேனும் துறையினை குறிப்பிடுகின்றது. மூலதனச் சந்தைகள் பொதுவாக பங்குச் (பங்குரிமை மூலதனம்) சந்தைகள், கூட்டு நிறுவன முறிச் சந்தைகள் மற்றும் அரசாங்கப் பிணையங்கள் சந்தைகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

மீது கடல் பயணக்குழுவிடமிருந்து பெற்றுக்கொண்ட பெறுகைகளுக்காக கம்பனி பங்கிலாபங்களைச் செலுத்தியது. பௌதீக ரீதியான பரிவர்த்தனை கிடைக்கப்பெறாமல் இருந்த வேளையில், பிரதானமாக பங்குகள் பத்திர வடிவத்தில் வழங்கப்பட்டமையினாலும் ஐரோப்பாவில் வழமையாக பல்வேறு கோப்பி விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளப்படுகின்ற வர்த்தகதமென்பதால் தரகரொருவரினை முதலீட்டாளர்கள் கண்டுபிடிக்க வேண்டியிருந்ததனாலும் கிழக்கிந்திய கம்பனிகளின் பங்குகளின் முதலீட்டாளர்கள் அவற்றை விற்பனை செய்வதில் இன்னல்களை எதிர்கொண்டனர். இறுதியாக, 1700களில் இப்பிரச்சனைகளுக்குத் தீர்வுகண்டு முறைசார்ந்த பரிவர்த்தனைகள் தாபிக்கப்பட்டு கம்பனிகளால் வழங்கப்படும் பிணையங்களுக்கான இரண்டாந்தரச் சந்தைகளை வசதிப்படுத்தியதுடன் நவீன பங்குப் பரிவர்த்தனைகளுக்கான தளமும் அமைந்தது. 1973இல் முதலாவது பரிவர்த்தனை லண்டனில் உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது. அதேவேளை பிந்திய 1700களின் போது ஐக்கிய அமெரிக்காவில் சிறியளவிலான தரகர் குழு பட்டன்வூட் மரமொன்றின் நிழலின் கீழ் பட்டன்வூட் மர உடன்படிக்கையினைச் செய்துகொண்டனர். இது நியூயோர்க் பங்குப் பரிவர்த்தனையினை (NYSE) நிறுவுவதற்கு வழிவகுத்தது. இறுதியாக பல முன்னேற்றமடைந்த நாடுகள் தமக்குச் சொந்தமான பங்குப் பரிவர்த்தனைகளை உருவாக்கிக் கொண்டன. இது உள்நாட்டுக் கம்பனிகள் வளர்ச்சியடைவதற்கு ஆரோக்கியமான பின்னணியினை வழங்கியது.

**பொருளாதார வளர்ச்சியினைப் பேணிவளர்ப்பதில் பங்குச் சந்தைகளின் வகிபாகம்**

பங்குச் சந்தையானது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பல்வேறு வழிகளிலும் பங்களிக்கின்றது. பங்குச் சந்தை அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான உறவு வெளியீடுகளில் பரந்தளவில் கலந்துரையாடப்பட்டுள்ளது. உள்நாட்டு நிதியியல் மூலவளங்களைப் பயன்படுத்தி வளர்ச்சியடைகின்ற துறைகளுக்கிடையில் அவற்றை வினைத்திறன்மிக்கவாறு ஒதுக்கீடுசெய்வது பொருளாதார அபிவிருத்திச் செயன்முறையில் பங்குச் சந்தைகளினால் ஆற்றப்படுகின்ற முக்கிய வகிபாகமொன்றாக விளங்குகின்றது. உள்நாட்டு மூலங்களிலிருந்து நீண்டகால நிதிக்கான பெறுவழியினைத் பங்குச் சந்தைகள் தோற்றுவித்து செழித்தோங்குகின்ற நிறுவனத் துறையின் அடித்தளமாக செயற்படுகின்றன. இதன் பயனாக இது தொழிலுருவாக்கத்தினையும் பொருளாதார சுபீட்சத்தினையும் பேணிவளர்க்கும். இதற்கு மேலதிகமாக, பட்டியலிடப்பட்ட கூட்டுநிறுவனங்களின் சிறந்த ஆளுகை நடைமுறைகளை ஊக்குவிப்பதில் பங்குப் பரிவர்த்தனைகள் பங்களிக்கின்றன. நவீன காலத்தில் சிறந்த ஆளுகையானது கூட்டுநிறுவன ஆளுகைகளை மாத்திரமின்றி சூழல் மற்றும் சமூக நோக்குகள் போன்ற கருமங்களையும் உள்ளடக்குகின்றது. நிலைபேறான அபிவிருத்திக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்ற இத்துறைகளின் செயலாற்றத்திற்கு தற்காலப் பங்குப் பரிவர்த்தனைகள் வலுவான வகிபாகத்தினைக் கொண்டுள்ளன. மேலும், இடர்நேர்வுமிக்க வணிகங்களுக்கும் புதிய வியாபார கூட்டுமுயற்சிகளுக்குமான முக்கிய நிதி மூலமாக பங்குச் சந்தைகளிலிருந்து வருகின்றன. இவ்வணிகங்கள் பெரும்பான்மையாக அருவச்சொத்துக்கள், மனித மூலதனம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி போன்றவற்றில் தங்கியிருப்பதனால் வங்கிக் கடன்களிலிருந்து நிதியங்களைத் திரட்டுவது கடினமானதாகும். ஆகையினால் போட்டி அநுகூலத்தினை அடைவதற்கு முக்கியமானதாகக் காணப்படுகின்ற புத்தாக்கத்திற்கு பங்குச் சந்தைகள் ஆதரவளிக்கின்றன.

வியாபார நோக்கிலிருந்து பார்க்கையில், பங்குச் சந்தையானது நிறுவனங்களுக்கு முக்கிய நிதியிடல் மூலமொன்றாகச் செயற்படுகின்றது. பங்குச் சந்தைகள் போன்ற முறைசார்ந்த நிதி திரட்டல் தளங்களின்றி வியாபாரங்கள் முதலீட்டாளர்களைத் தனிப்பட்ட ரீதியாக சென்றடைவதன் மூலம் நிதியங்களைத் திரட்ட நேரிடும். இது அதிக காலமெடுப்பதும் செலவுமிக்கதுமாகும் என்பதுடன் வியாபார விரிவுபடுத்தலை ஊக்கமிழக்கச் செய்யலாம். வங்கித்தொழில் முறைமையினூடாக நிதியளிப்பதற்கான பெறுவழியுடன் ஒப்பிடுகையில் பங்குச் சந்தைகள், நீண்ட முதிர்ச்சிகளுடன் கூடிய பாரியளவு நிதியங்களை குறைவான நிதியிடல் செலவுகளுடனான வாய்ப்புக்களுக்கு பெறுவழியினை வழங்குகின்ற கவர்ச்சிகரமான மாற்றுவழியொன்றினை ஏற்பாடு செய்கின்றன. இதற்கு மேலதிகமாக, நிதி மூலங்களைப் பன்முகப்படுத்துவதற்கும் வங்கித்தொழில் துறை மீது கூட்டுநிறுவனங்கள் தங்கியிருப்பதனைக் குறைப்பதற்கும் அவை உதவுகின்றன. வழங்கப்படும் கொடுகடன் வசதிகளை வங்கிகள் இறுக்கமடையச்செய்கின்ற நெருக்கடியான நிலைமையில் வங்கித்தொழில் துறை காணப்படுகின்ற வேளையிலும் கூட தொழில் தொடர்ச்சிக்கு பங்குச் சந்தை முக்கியமானதாக விளங்குகின்றது. முறைசார்ந்த நிதியியல் நிறுவனத் துறை பணியாற்றுவதற்கு தயங்குகின்ற இடர்நேர்வுமிக்க மற்றும் பிணையுறுதி பற்றாக்குறையான வியாபாரத் துறைகளுக்கு பங்குச் சந்தைகள் முக்கிய நிதியிடல் மூலமாக செயற்படுகின்றன. மேலும், புத்தாக்கமிக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளை அதிகம் உருவாக்குவதற்கு பங்குச் சந்தையின் போட்டிமிக்க தன்மையானது அதிக வெளிப்படைத்தன்மை, சிறந்த தகவல் பரப்பல் மற்றும் சிறந்த ஆளுகை நடைமுறைகள் என்பவற்றினூடாக கம்பனிகள் அவற்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும் அவர்களின் துறைகளை விரிவுபடுத்துவதற்கும் இயலச்செய்யக்கூடியதாகும்.

முதலீட்டாளர்கள் நோக்கிலிருந்து பார்க்கையில், உயர்ந்தளவான இடர்நேர்வு காணப்படுகின்றபோதிலும், வங்கி வைப்புகளுடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவில் உயர்வான ஆதாயங்களுடன் தமது பணத்தை முதலிடுவதற்கான பாதுகாப்பான மற்றும் தீங்கற்ற தளமொன்றாகச் பங்குச் சந்தைகள் செயற்படுகின்றன. பங்குப் பரிவர்த்தனைகள் போன்ற முறைசார்ந்த தளங்களின்றி முதலீட்டாளர்கள் ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையில்லாத உரிமமளிக்கப்படாத நிதியியல் உற்பத்திகளை நாடவேண்டியிருக்கலாம், இதன் விளைவாக அவர்களின் முதலீடுகள் பாரிய இடர்நேர்வுகளுக்குள்ளாகலாம். முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கு மேலதிகமாக, விசேடமாக ஓய்வூதிய நிதியங்கள் போன்ற முதலீட்டாளர்களுக்காக இடர்நேர்வு முகாமைத்துவக் கருவியொன்றாக பங்குச் சந்தை செயற்படுகின்றது. பரந்த வகையான சாதனங்களுடன் பங்குச் சந்தைகள் தமது சொத்துப்பட்டியல்களைத் பன்முகப்படுத்துவதற்கு முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பளிக்கக்கூடியதுடன் அவர்களின் இடர்நேர்வுகளை முகாமைசெய்ய உதவுகின்றது. சிறப்பாக விருத்தியடைந்த பங்குப் பரிவர்த்தனை உள்ளடங்கலாக நாட்டின் நவீனமயப்படுத்தப்பட்ட நிதியியல் முறைமை எவ்வாறு நாட்டை அபிவிருத்தியடைந்த தேசமாக உருவாக்கியுள்ளது என்பதனை உறுதிசெய்கின்ற ஏராளமான ஆய்வுகள் காணப்படுகின்றன (World Federation of Exchanges, 2017). அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள பங்குப் பரிவர்த்தனைகள் நாட்டின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க பங்காற்றுவது மாத்திரமின்றி இன்றைய உயர்வான ஒன்றுடனொன்று இணைக்கப்பட்ட உலகில் உலகளாவிய பொருளாதாரத்தையும் இயக்குகின்றன. நியூயோர்க் பங்குப் பரிவர்த்தனை, நெஷனல் அசோசியேஷன்ஸ் ஒப் செக்கிரிட்டி டீலர் ஓட்டோமெட்டிக் குவோட்டேசன் (NASDAQ) டோக்கியோ பங்குப் பரிவர்த்தனை, சங்காய் பங்குப் பரிவர்த்தனை, ஹொங்கொங் பங்குப் பரிவர்த்தனை, லண்டன் பங்குப் பரிவர்த்தனை ஆகிய இன்றைய முன்னணி பங்குப் பரிவர்த்தனைகள் சில சந்தை மூலதனவாக்கப் பெறுமதி நியதிகளில் உலகம் முழுவதும் தொழிற்படுகின்ற பல எண்ணிக்கையான பல்தேசியக் கம்பனிகளை உள்ளடக்குகின்றன. ஐக்கிய அமெரிக்காவின் இரண்டாவது பாரிய பங்குப் பரிவர்த்தனையான நெஷனல் அசோசியேஷன்ஸ் ஒப் செக்கிரிட்டி டீலர் ஓட்டோமெட்டிக் குவோட்டேசன் (NASDAQ) பௌதீக ரீதியான அமைவிடமொன்றினைக் கொண்டிராது அது தானாகவே வேறுபாட்டினை ஏற்படுத்தியுள்ளது. இதற்குப் பதிலாக இலத்திரனியல் ரீதியாக வணிகங்களை நிறைவேற்றுகின்ற கணினிகளின் வலையமைப்பொன்றினை உள்ளடக்கியுள்ளது. இது வணிகங்களை மிகவும் வினைத்திறன்மிக்கதாக்குவதுடன் முன்வைத்தல்-கோரல் விலை விரிவினைக்[3] குறைப்பதற்கு வழிவகுத்துள்ளது. NASDAQ இலிருந்து தோன்றுகின்ற போட்டியானது உலகம் முழுவதும் பங்குச் சந்தைகளை முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட தளங்களாக பரிணமிக்கச் செய்துள்ளது. இம்முன்னணி வகிக்கின்ற புத்தாக்கமிக்க உற்பத்திகள் மற்றும் சேவைகளுடன் கூடிய பங்குச் சந்தைகள் உலகளாவிய பொருளாதாரத்தை புதிய வாய்ப்புகளை நோக்கி இயங்குகின்றன.

### அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பங்குப் பரிவர்த்தனைகள்

பங்குச் சந்தைகள் எந்தவொரு நாட்டுக்கும் அநுகூலமிக்கதாகக் காணப்படுகின்ற அதேவேளை அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடொன்றினால் பயனடையக்கூடிய நன்மைகள் மிகவும் முக்கியத்துவமிக்கதாகும். மூலதன முதலீட்டுக்கான நிதியிடல் மூலமொன்றினை வழங்குவதன் வாயிலாக அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளினால் எதிர்கொள்ளப்படும் வியாபார விரிவடைதலை நோக்கி நிதியங்களை வழிப்படுத்துவதற்கும் உற்பத்தி அபிவிருத்தியில் புத்தாக்கத்தினைத் தூண்டுவதற்கும் முக்கிய சவால்களில் ஒன்றான முன்னேற்றகரமான மூலதனச் சாதனங்கள் காணப்படாமையினை வெற்றிகொள்வதற்கும் பங்குப் பரிவர்த்தனைகள் உதவுகின்றன. அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளுக்கிடையில் பயிற்றப்பட்ட மனித வளம் வெளிச்செல்லுதல் அதிகரிக்கின்ற பிரச்சனை தீவிரமடைகின்ற காலகட்டத்தில் தொழில் விரிவாக்கமும் புத்தாக்கமும் அதிக தொழில்வாய்ப்புகளை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்றன. இது கல்விகற்ற மற்றும் தேர்ச்சிபெற்றத் தொழிற்படையினை தக்கவைப்பதற்கு நாட்டிற்கு உதவலாம்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் பங்குச் சந்தை முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றுவதற்கு மத்தியிலும் அநேகமான பொருளாதாரங்கள் தொடர்ந்தும் பங்குச் சந்தை அபிவிருத்தியில் மிகவும் வரையறுக்கப்பட்ட மட்டத்தையே எடுத்துக்காட்டுக்கின்றன. பொதுவாக பங்குச் சந்தை அபிவிருத்தியானது அதன் அளவு, பெறுவழி, விரிவு மற்றும் வினைத்திறன் போன்ற காரணிகளூடாக அளவிடக்கூடியதாகும். அநேகமான அபிவிருத்தியடைகின்ற பொருளாதாரங்களில் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையான கம்பனிகளே மூலதனத்தைத் திரட்டுவதற்கு பங்குச் சந்தையில் தாமாக பட்டியலிட்டப்பட்டுள்ள அதேவேளை பட்டியலிடப்பட்ட பங்கின் பெரும்பாலானவை அடிக்கடி விற்பனை செய்யப்படாது பங்குச்சந்தைகளை அளவில் சிறியதாக அல்லது திரவத்தன்மையற்றதாக ஆக்குகின்றன. ஆதலால் சில்லறை முதலீட்டாளர்களின் பங்குபற்றல் குறைவாகக் காணப்படுகின்றது. எனினும், அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளின் பங்குச்

3 முன்வைத்தல்-கோரல் விலை விரிவு என்பது குறிப்பான பங்கொன்றுக்காக சாத்தியமான கொள்வனவாளரினால் முன்வைக்கவப்படுகின்ற விலைக்கும் சாத்தியமான விற்பனையாளரினால் கோரப்படுகின்ற விலைக்கும் இடையிலான வேறுபாடாகும்.


சந்தைகளில் ஓய்வூதிய நிதியங்கள் முக்கிய பங்காற்றுகின்ற அதேவேளை ஏனைய முதலீட்டாளர்கள் பின்னடைந்து காணப்படுகின்றனர். பரஸ்பர நிதியங்கள்[4] போன்ற முதலீட்டு வாய்ப்புகள் கிடைக்கப்பெறும் வீதமும் நிதியியல் அறிவின் மட்டமும் இதற்கு முக்கிய பங்காற்றுகின்றன. பரஸ்பர நிதியங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் பல நாடுகளிலும் சில்லறை முதலீட்டாளர்கள் முனைப்பான பங்களிப்பைக் காண்பிப்பதற்கு தொடங்கினர். குறைந்தளவான அறிவு மட்டமும் பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் நிறுவனத்துறைக்கான மூலதனப்பாய்ச்சலுக்குத் தடையாக இருந்துவருவதாக இனங்காணப்பட்டுள்ளது.

மறுபுறத்தில், பங்குச் சந்தை உள்ளடங்கலாக மூலதனச் சந்தைகளின் அபிவிருத்தியும் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி நிலைமையின் மீது சார்ந்திருக்கிறது. ஒரு நாட்டின் பங்குச் சந்தை மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றிற்கிடையிலான தொடர்பு பின்னிப்பிணைந்ததாகும். பங்குச் சந்தை அபிவிருத்தியானது பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கின்ற அதேவேளை பொருளாதார வளர்ச்சி பங்குச் சந்தைகள் மேலும் விரிவடைதலுக்குப் பங்களிக்கின்றது. பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடும் நிதியியல் உட்கட்டமைப்பின் சீரான தொழிற்பாடு மற்றும் ஆற்றல் வாய்ந்த சட்டச் சூழல் என்பன உள்ளடங்கலாக நிதியியல் துறை அபிவிருத்தியும் பங்குச் சந்தைகளின் அபிவிருத்திக்கு முன்நிபந்தனைகளாக விளங்குகின்றன. பங்குச் சந்தையின் அபிவிருத்தி வேகம் உள்நாட்டு சந்தைப் பங்குகளினால் பாதிக்கப்படுவதுடன் வெளிவாரி நிகழ்வுகள் மற்றும் உலகளாவிய சந்தை நிலைமைகள் என்பன மூலமும் பாதிக்கப்படுகின்றன. அத்தகைய எதிர்மறையான நிகழ்வுகள் நீண்ட கால பொருளாதாரத் தாக்கத்தைக் கொண்டிருக்காத போதும் அவை நிதிச் சந்தைகளில் பங்கேற்கின்றவர்களின் எண்ணப்பாங்கில் கணிசமான பாதகமான தாக்கத்தினைக் கொண்டிருக்கக்கூடியது என்பதுடன் இதனூடாக பங்குச் சந்தைகளின் விரிவடைதலைத் தாமதப்படுத்தலாம்.

### பங்குப் பரிவர்த்தனைச் செயலாற்றங்கள் பற்றிய அளவீடுகள்

பங்குச் சந்தையொன்றின் அல்லது குறித்த முதலீடொன்றின் செயலாற்றம், அளவு, வினைத்திறன் மற்றும் திரவத்தன்மை என்பவற்றை அளவிடுவதற்கு பல எண்ணிக்கையான குறிகாட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன. மிகவும் பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற குறிகாட்டிகளிலொன்று விலைச் சுட்டெண்களாகும். டோ ஜோன்ஸ் இன்டஸ்றியல் எவரேஜ் (DJIA) அல்லது NASDAQ கூட்டுச் சுட்டெண் ஆகியன ஐ.அமெரிக்காவில் பங்குச் சந்தைக்கென அதிகம் பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை அளவீடுகளில் இரு சுட்டெண்களாகும். மறுபுறத்தில், இச்சுட்டெண்கள் மிகவும் அடிக்கடி வர்த்தகப்படுத்தப்படுகின்ற ஒரு சில முக்கிய பட்டியலிடப்பட்ட பங்குகளை மாத்திரம் பயன்படுத்தி தொகுக்கப்படுகின்ற அதேவேளை ஸ்டான்டட் அன்ட் புவர் 500 சுட்டெண்,

**வரைபடம் 1: உள்நாட்டு மூலதனச் சந்தைகளின் அளவு, பெறுவழி மற்றும் பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுச் சுட்டெண் - துணைச் சுட்டெண் பங்குரிமை மூலதனச் சந்தைகள்**




மூலம்: பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனம், உலக வங்கிக் குழுமம்

குறிப்பு: பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனமானது அரசாங்க முறிச் சந்தைச் சுட்டெண், நிறுவன முறிச் சந்தைச் சுட்டெண் மற்றும் பங்குரிமை மூலதனச் சுட்டெண் ஆகிய மூன்று துணைச் சுட்டெண்களையும் அடிப்படையாகக் கொண்டு உள்நாட்டுச் சந்தை அளவு, பெறுவழி மற்றும் செயற்பாடு என்பவை பற்றிய சுட்டெண்ணைக் கணிக்கிறது. பங்குரிமை மூலதனச் சுட்டெண் மேலே வரைபடத்தில் காட்டப்பட்டவாறு பங்குரிமை மூலதனச் சந்தையின் உண்மையான அளவு மற்றும் விரிவு என்பவற்றைப் பிரதிபலிக்கிறது.

மூலம்: உலக வங்கிக் குழுமம், காலம்: 2010 - 2017

வில்ஷியர் 5000 மற்றும் ரஷல் 3000 ஆகியன பாரியளவிலான பங்குகளின் எண்ணிக்கையுடன் இணைந்த ஒட்டுமொத்த விலை போக்குகளையும் பதிவுசெய்கின்றன. பங்குகளைப் பாரியளவில் பிரதிநிதிப்படுத்துகின்ற விலைச் சுட்டெண்கள் பங்குச் சந்தையினை மிகவும் துல்லியமான சித்தரிக்கின்றன. எவ்வாறாயினும், சில முக்கிய கம்பனிகளுடனான விலைச் சுட்டெண்கள் மிகவும் வினைத்திறனான செயலாற்றத்தினைக் காண்பிப்பதுடன் அடிக்கடி வர்த்தகம் செய்யப்படுகின்ற பங்குகளின் இயக்கவாற்றல்மிக்க தன்மையினைப் பதியும் இயலளவினைக் கொண்டன. இலங்கையில் ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண்ணானது குறைந்தபட்ச அளவு, திரவத்தன்மை மற்றும் நிதியியல் இயலுமை அடிப்படை அளவுகள் ஆகியவற்றை நிறைவுசெய்கின்ற கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள மொத்தச் சந்தை மூலதனவாக்கப் பெறுமதி நியதிகளில் 20 பாரிய கம்பனிகளின் போக்குகளை பதிவுசெய்கின்ற அதேவேளை, அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணானது சந்தையில்[5] விலை மாற்றங்களின் ஒட்டுமொத்த அசைவுகளையும் பதிவுசெய்கின்றது.

பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கையும் பட்டியலிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையும் பங்குப் பரிவர்த்தனையொன்றின் அளவினை நிர்ணயிப்பதற்குப் பயன்படுத்தக்கூடியதாக இருக்கின்ற அதேவேளையில் சந்தையின் மூலதனவாக்கப் பெறுமதியானது பங்குச் சந்தையின் பெறுமதியின் மிகவும் பொதுவான அனைத்தையுமுள்ளடக்கிய அளவீடொன்றாகக் காணப்படுகின்றது. சந்தையின் மூலதனவாக்கப் பெறுமதி என்பது ஒரு குறித்த நேரத்தில் பங்குகளின் அவற்றுக்குரிய விலைகளினால் பெருக்கப்படும் விநியோகிக்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கையாகும். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக சந்தையின் மூலதனவாக்கப் பெறுமதி நாடுகளுக்கிடையில் பங்குப் பரிவர்த்தனைகளை ஒப்பிடுவதற்கு தொடர்புபடுத்தப்படுகின்ற அளவீடாகப் பயன்படுத்தப்படுகின்றது. விலைச் சுட்டெண்களுக்கும் அளவீடுகளுக்கும் மேலதிகமாக சந்தைப் புரள்வும் சந்தைத் திரவத்தன்மையின் சிறந்த அளவீடொன்றாகக் காணப்படுகின்றது. திரவத்தன்மைமிக்க சந்தையானது குறைந்தளவான கொடுக்கல்வாங்கல் செலவுகளுடன் கொடுக்கல்வாங்கல்களை வினைத்திறன்மிக்கவாறு நிறைவேற்றுவதற்கு முதலீட்டாளர்களை இயலச்செய்கின்றது. இதற்கு மேலதிகமாக, புரள்வு வேக விகிதம்[6] என்பதும் சந்தைத் திரவத்தன்மை மற்றும் வினைத்திறன் பற்றிய பிரபல்யமிக்க அளவீடொன்றாகக் காணப்படுகின்றது. ஒட்டுமொத்த சந்தைச் செயலாற்றம் பற்றிய இவ்வளவீடுகளுக்கு மேலதிகமாக முதலீட்டாளர்களால் கவனிக்கப்படுகின்ற பல முக்கிய விகிதங்களும் காணப்படுகின்ற அதேவேளை பங்குப் பரிவர்த்தனையினைக் குறிப்பாக துறையினை அல்லது தனியொரு பங்கினை மதிப்பிடுவதும் முக்கியமானதாக விளங்குகின்றது. உழைப்புகளுக்கான விலை விகிதம்[7] மற்றும் ஏட்டு பெறுமதிக்கான விலை[8] என்பன பங்கொன்றின் நடப்புச் சந்தை விலை முறையே கம்பனியின் உழைப்பு மற்றும் கம்பனியின் ஏட்டுப் பெறுமதி தொடர்பில் எவ்வளவு கவர்ச்சிகரமானதாகக் காணப்படுகின்றது என்பதனை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. மேலும், பேடா[9] மற்றும் அல்பா[10] விகிதங்கள் சந்தையுடன் அல்லது அடிப்படை அளவீட்டுடன் தொடர்புபடுத்தி பங்குகளின் அல்லது முதலீடுகளின் தொடர்புடைய இடர்நேர்வு மற்றும் ஆதாயம் என்பனவற்றை மதிப்பிடுவதற்கு முதலீட்டாளர்களுக்கு உதவுகின்றது.

### இலங்கையில் பங்குச் சந்தை

கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது இலங்கையின் ஏக பங்குப் பரிவர்த்தனையாகும். இலங்கையின் பங்கு வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டமை 1896 வரை பின்னோக்கி செல்வதாயினும், அக்காலகட்டத்திலிருந்த இரு பங்குத் தரகு அமைப்புக்களை ஒன்றிணைத்ததனைத் தொடர்ந்து 1985 ஆம் ஆண்டிலேயே கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை நிறுவப்பட்டது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது உள்நாட்டுக் கம்பனிகளுக்கு மூலதனத்தைத் திரட்டுவதில் வசதியளிக்கின்ற அதேவேளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இரு வகையான முதலீட்டாளர்களுக்கும் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்கி இதனூடாக உள்நாட்டுக் கம்பனிகளின் இயலளவினை வலுப்படுத்தி தொழில் உருவாக்கத்திற்கு ஆதரவளித்து நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிக்கின்றது. பங்குரிமை மூலதனப் பரிவர்த்தனையாகச் செயற்படுவதற்கு மேலதிகமாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது படுகடன் சாதனங்கள் வர்த்தகத்தினை வசதிப்படுத்துகின்றது. அதேபோன்று மத்திய வைப்பக முறைமை போன்ற அதன் துணை நிறுவனமூடாக

5 2022இல் உள்ளமைப்பு நிறைவேற்றுதல் முறையினை முழுமையான சந்தை மூலதனவாக்கப் பெறுமதியிலிருந்து தங்குதடையற்ற மிதக்கவிடப்பட்ட சீராக்கம்செய்யப்பட்ட சந்தை மூலதனமாக்கல் பெறுமதிக்கு மாற்றுவதன் மூலம் அனைத்து பங்கு விலைச் சுட்டெண்ணின் கணிப்பு முறையியலைத் திருத்துவதற்குத் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை திட்டமிடுகின்றது.

6 குறைவான புரள்வு வேகமானது சந்தையில் உயர்வான வர்த்தகப்படுத்தல் செலவினையும் குறைவான பங்கேற்றலையும் குறிப்பிடுகின்றது.

7 உழைப்புகளுக்கான விலை விகிதம் - கம்பனியொன்றின் உழைப்பிற்கு முதலீட்டாளர்கள் எவ்வளவு கொடுப்பனவு செய்வதற்கு விருப்பப்படுகின்றனர் என்பதனை இவ்விகிதம் எடுத்துக்காட்டுகின்றது. உயர்வான உழைப்புகளுக்கான விலை விகிதப் பெறுமதியை மிகையாக பெறுமதி மதிப்பீடுசெய்யப்பட்ட பங்கு என அர்த்தப்படலாம்.

8 ஏட்டுப் பெறுமதிக்கான விலை விகிதம் - இவ்விகிதமானது கம்பனியின் ஏட்டுப் பெறுமதியுடன் அதன் சந்தைப் பெறுமதியினை ஒப்பீடுசெய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. கம்பனியின் ஏட்டுப் பெறுமதியுடன் தொடர்புடைய கம்பனியொன்றின் பங்கொன்றிற்கான பங்குச் சந்தையினை இடம்பெறச்செய்கின்ற பெறுமதியினை இது நாடுகின்றது.

9 பேடா காரணி சந்தைக்கு அல்லது அடிப்படை அளவீட்டிற்குத் தொடர்புபடுத்தி முதலீடொன்றின் தளம்பல் நிலையினை அளவிடுகின்றது.

10 அல்பா என்பது நிதியமொன்றின் அல்லது சொத்துப்பட்டியலொன்றின் செயலாற்றத்தினை அளவிடும் போது பயன்படுத்தப்படுவதுடன் அதன் அடிப்படை அளவிற்கு எதிராக ஏதேனும் செயலாற்றம் பற்றிய விரிவினைக் குறிப்பிடுகின்றது.


தீர்ப்பனவு மற்றும் பாதுகாப்பாகப் பேணுதல் போன்ற வேறு தொடர்புபட்ட பணிகளையும் வழங்குகின்றது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை தற்போது வரையறுக்கப்பட்ட துணை உத்தரவாதக் கம்பனியாக இயங்குவதுடன் இது தாபக பங்குத் தரவு நிறுவனங்களினால் பரஸ்பரம் உரிமை கொள்ளப்படுகின்றது. எனினும், பரிவர்த்தனையானது தற்போது வரையறுக்கப்பட்ட கம்பனியாக அது உருவாகுவதற்கு இயலச்செய்கின்ற உரிமை மாற்றல் செய்முறையினை முன்னெடுக்கின்றது.

**கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் அண்மைய இயக்கவாற்றல்கள்**

அண்மைக் காலத்தில் பங்குச் சந்தைகளை மீளாய்வுசெய்கின்ற போது 2009 மே தொடக்கம் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை குறிப்பிடத்தக்க வளர்ச்சியினை எய்தி நீண்ட கால சிவில் முரண்பாடு முடிவிற்கு வந்ததுடன் சாதகமான சந்தை மனோபாவத்தைப் பெற்றுக் கொண்டுள்ளதை பிரதிபலித்துள்ளது என்பது அவதானத்தில் கொள்ளப்பட்டுள்ளது. வீழ்ச்சியடைகின்ற பணவீக்கச் சூழல் மற்றும் நெருக்கடிக் காலப்பகுதிக்குப் பின்னர் நிலவிய ஒப்பீட்டளவில் குறைவான வட்டி வீதங்கள் என்பனவற்றுடன் புத்தாக்கம் முதலீட்டாளர் நம்பிக்கையும் பங்குச் சந்தையின் இயக்கவாற்றல்மிக்க செயலாற்றத்திற்கு ஆதரவளித்தன. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் செயற்பாடு 2010இல் வரலாற்றிலேயே உயர்வான மட்டங்களுக்கு வளர்ச்சியடைந்ததுடன் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்[11] 96 சதவீதத்தினால் உயர்வடைந்தது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் சந்தை மூலதனவாக்கப் பெறுமதி 2009 மற்றும் 2010 ஆகிய இரு ஆண்டுகளில் ஏறத்தாழ 100 சதவீதத்தினைப் பதிவுசெய்தது. பங்குச் சந்தையின் இவ்வுத்வேகமடைதல் 2011 பெப்புருவரி நடுப்பகுதி வரையும் தொடர்ந்தது. 2011 பெப்புருவரி நடுப்பகுதியிலிருந்து தரகர்களால் வழங்கப்படும் கொடுகடன் மீது ஒழுங்குமுறைப்படுத்துநரான இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து விலைத் திருத்தமொன்று அவதானிக்கப்பட்டது.

பங்குச் சந்தையின் செயலாற்றமானது 2012இன் முதலரைப்பகுதியில் குறைவடைந்து காணப்பட்ட போதிலும் 2012இன் இரண்டாமரைப் பகுதியில் சாதகமான மீட்சியொன்று அவதானிக்கப்பட்டு 2013இலும் அது தொடர்ந்தது. இதற்குப் பிரதான காரணமாக செலாவணி வீதத்தில் படிப்படியான மீட்சி மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களில் குறைப்பு தரகர் கொடுகடன் மற்றும் வர்த்தகப்படுத்தல் மீது இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு மூலம் விதிகளைத் தளர்த்துதல் அத்துடன் உலகளாவிய நிதியியல் சந்தைகளின் படிப்படியான மீட்சியின் சாதகமான தாக்கம் என்பன அமைந்திருந்தன. அதேபோன்று 2014ஆம் ஆண்டும் பங்குப் பரிவர்த்தனைக்கும் சாதகமான ஆண்டாக அமைந்திருந்ததுடன் விலைச் சுட்டெண்கள் மற்றும் சந்தை மூலதனவாக்கப் பெறுமதி மற்றும் புரள்வு போன்ற பல குறிகாட்டிகளும் முன்னைய பதிவுகளையும் விஞ்சி முன்னேற்றம் கண்டன.

**வரைபடம் 2: விலைச் சுட்டெண்களின் அசைவுகள்[12], மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் புரள்வுகள்**




மூலம்: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை


11 அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணிற்கான தள ஆண்டு 1985 ஆகும்.

12 ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண் 2020 யூனில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது முன்னர் இருந்த மிலங்கா விலைச் சுட்டெண்ணை மாற்றீடு செய்தது.

விலைச் சுட்டெண்களில் தளம்பல் மிக்க அசைவுகளால் பிரதிபலிக்கப்பட்டவாறு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2015 மற்றும் 2016ஆம் ஆண்டுப்பகுதியில் மந்தமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. அதிகரித்த முதலீட்டாளர் நிச்சயமின்மை, உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகள் இரண்டிலும் உயர்வான வட்டி வீதங்கள், செலாவணி வீதத்தில் தேய்வடைதல் மற்றும் வளர்ந்துவரும் சந்தைகளிலிருந்தான மூலதனப்பாய்ச்சல்கள் திரும்பல் போக்கு என்பன இப்பின்னடைவிற்கு வழிவகுத்தன. 2017ஆம் ஆண்டில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை ஒப்பீட்டளவில் ஆரோக்கியமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது. தேறிய அடிப்படையில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் வெளிநாட்டு முதலீடுகள் 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017இல் குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டன. குறைவான விலைகளில் அடிப்படையில் வலுவான பங்குகள் கிடைக்கப்பெற்றமை இதற்குப் பகுதியளவிலான காரணமாக அமைந்தது. எனினும், உள்நாட்டு மற்றும் உலகளாவிய சூழலில் காணப்பட்ட பாதகமான அபிவிருத்திகளுக்கு பதிலிறுத்தி 2018இல் வீழ்ச்சிப் போக்கொன்று அவதானிக்கப்பட்டது. அரசியல் நிச்சயமற்றதன்மை, செலாவணி வீதம் மீதான அழுத்தம் மற்றும் ஐக்கிய அமெரிக்காவில் கொள்கை வட்டி வீதங்கள் இயல்புநிலைக்கு கொண்டுவருவதுடன் இணைந்த உலகளாவிய அபிவிருத்திகளின் காரணமாக முதலீட்டாளர் எண்ணப்பாங்குகளில் மாற்றம் என்பன மூலம் பிரதானமாகத் தூண்டுப்பட்டு ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை அவதானித்தது. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களினால் தோற்றுவிக்கப்பட்ட பாதுகாப்புக் கரிசனைகளுடன் ஒன்றிணைந்த குறைவடைந்த பொருளாதார நடவடிக்கைகள், முதலீட்டாளர் நம்பிக்கை இழந்தமை என்பன 2019இல் மந்தமான பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்கு வழிவகுத்தன. உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பின்னர் சந்தைக் குறிகாட்டிகளில் மீட்சிக்கான சமிக்ஞைகள் அவதானிக்கப்பட்ட போதிலும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களினால் தோற்றுவிக்கப்பட்ட பாதுகாப்புக் கரிசனைகளுடனும் நிலவிய அரசியல் உறுதியின்மைகளுடனும் இணைந்த வலுவிழந்த முதலீட்டாளர் நம்பிக்கையின் காரணமாக 2019 காலப்பகுதியில் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் இடம்பெற்றன.

உலகளவில், 2020இன் ஆரம்ப காலத்தில் கொவிட்-19 உடன் இணைந்து முதலீட்டாளர் எண்ணப்பாங்கு பாதுகாப்பான சொத்துகளை நோக்கி மாறுதலடைந்ததுடன் இடர்நேர்வுகள் மிக்க சொத்துகளின் விலைகள் சீர்குலைந்தன. அதேபோன்று உள்நாட்டு முதலீட்டாளர்களும் மிகவும் திரவத்தன்மைமிக்க மற்றும் குறைவான இடர்நேர்வுமிக்க சொத்துகளை நாடியமையினால் இலங்கையின் பங்குச் சந்தையில் திடீர் தளம்பல்கள் அவதானிக்கப்பட்டன. சுட்டெண் அடிப்படையிலமைந்த தற்காலிக வழிமுறைகள்[13] சந்தையில் மிதமிஞ்சிய தளம்பல்கள் காரணமாக ஏற்பட்ட பல சந்தர்ப்பங்களில் செயற்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு

**வரைபடம் 3: சந்தை மூலதனவாக்கப் பெறுமதிப் போக்குகள்**




**மூலங்கள்:** தொகைமதிப்புப் புள்ளிவிபரவியல் திணைக்களம், கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை


13 சுட்டெண் அடிப்படையிலான தற்காலிக வழிமுறைகள் என்பது உயர்வான தளம்பல்மிக்கக் காலப்பகுதியில் சந்தை திரிபடைலைத் தடுப்பதற்குப் பயன்படுத்தப்படும் கருவியொன்றாகும். இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று மூலம் தோற்றுவிக்கப்பட்ட சவால்களை எதிர்கொள்வதில் விலைச்சுட்டெண்களில் மிதமிஞ்சிய தளம்பலினைக் கட்டுப்படுத்துவதற்கு 2020 ஏப்பிறலில் சுட்டெண் அடிப்படையிலமைந்த தற்காலிக வழிமுறைகள் மீதான ஒழுங்குவிதிகளைத் திருத்தியது.

குறைந்த வட்டி வீதக் கட்டமைப்பு பேணப்பட்டமையின் மூலம் ஆதாயத்தை நாடுகின்ற முதலீட்டாளர்கள் படிப்படியாக பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு ஆரம்பித்தனர். கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தோற்றுவிக்கப்பட்ட எதிர்பாராத சவால்களுக்கு மத்தியில் சாதகமான செயலாற்றத்துடன் 2020ஆம் ஆண்டை நிறைவுசெய்தது. பங்குச் சந்தை, 2020இன் ஏறத்தாழ மே நடுப்பகுதியில் அறிக்கையிடப்பட்ட அதன் ஆகக்குறைந்த புள்ளியிலிருந்து 2020 இறுதியளவில் குறிப்பிடத்தக்களவு மேம்பட்டது. 2020 மே 12ஆம் திகதியன்று அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண் ஒரு தசாப்த காலத்தில் அதன் ஆகக் குறைந்த புள்ளியினைப் பதிவுசெய்தது. ஆயினும், 2020இன் இறுதியளவில் 10.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியினைப் பதிவுசெய்து மீட்சியடைந்தது. இது, 2014 தொடக்கம் உயர்வான வருடாந்த அதிகரிப்பொன்றாகும். மேம்பட்ட சந்தைச் சுட்டெண்கள் மற்றும் 2020இல் உயர்வான புரள்வுப் பதிவு என்பவற்றுடன் ஆசியப் பிராந்தியத்தில் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்திலிருந்து மிக விரைவாக மீட்சியடைந்த சந்தைகளிலொன்றாக கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை தோற்றம்பெற்றது.

நிலவிய குறைவான வட்டி வீதக் கட்டமைப்பு, தரகர் கொடுகடன் மற்றும் எல்லை வர்த்தகப்படுத்தல் வசதிகளூடாக மிகையான கொடுகடன் கிடைக்கப்பெறுகின்றதன்மை மற்றும் உழைப்புக்களுக்கான சந்தை விலை விகிதம் அத்துடன் ஏட்டுப் பெறுமதிக்கான விலை[14], சந்தையில் உள்நாட்டுச் சில்லறை முதலீட்டாளர்களின் முனைப்பான பங்கேற்பு என்பன 2020இல் மத்திய வைப்பக முறைமைக் கணக்கினை ஆரம்பிப்பதில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பொன்றினைப் பிரதிபலித்து 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 70 சதவீத வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எனினும், 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளிநாட்டு முதலீட்டாளர் பங்கேற்பு குறைவாகக் காணப்பட்டது. 2020இல் கொவிட்-19 எழுச்சிக்கு மத்தியில் தேறிய வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்தும் இடம்பெற்ற போதிலும் பங்குச் சந்தையில் சராசரியையும் விடவும் குறைவான வெளிநாட்டு ஈடுபாடு பல ஆண்டுகளாக இலங்கைக்கு முக்கிய கரிசனையாக இருந்து வருகின்றது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020 காலப்பகுதியில் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களில் ரூ.51.3 பில்லியனைப் பதிவுசெய்தது. இது, கரிசனையொன்றாகக் காணப்படுகின்றது.

அதேபோன்று பங்குரிமைச் சந்தையில் உள்நாட்டு முதலீட்டாளர்கள் தமது பிரசன்னத்தை அதிகரித்தமையினால் கொழும்புப் பங்குச் சந்தை 2021ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகையான வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. நிலவிய குறைவான வட்டி வீதங்களின் கீழ், 2020ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண், ஸ்டான்டட் அன்ட் புவர் இலங்கை 20 சுட்டெண்கள் என்பன முறையே 80.5 சதவீதத்தினையும் 60.5 சதவீதத்தினையும் கொண்ட வளர்ச்சியினையும் பதிவுசெய்தமையினால் முதலீட்டாளர்களின் விருப்பங்கள் பங்குரிமை முதலீடுகளை நோக்கி மாறுதலடைந்த அதேவேளை, சந்தை மூலதனவாக்கப் பெறுமதி 85.4 சதவீத

**வரைபடம் 4: உழைப்புகளுக்கான சந்தை விலை விகிதம், ஏட்டுப் பெறுமதிக்கான விலை மற்றும் வணிகங்களின் எண்ணிக்கை**




மூலம்: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை

14 பிராந்தியத்தினுள் இலங்கை ஆகக் குறைந்த உழைப்புகளுக்கான சந்தை விலை விகிதத்தைப் பதிவுசெய்கின்றது. கவர்ச்சிகரமான இவ்வுழைப்புகளுக்கான சந்தை விலை விகிதம் மற்றும் ஏட்டுப் பெறுமதிக்கான விலைகளுடன் உள்நாட்டு முதலீட்டாளர்கள் எதிர்காலத்தில் இலாபங்களை எதிர்பார்த்து பங்குகளில் முதலிடுவதற்குத் தொடங்கினர்.


வளர்ச்சியினைப் பதிவுசெய்தது. எனினும், முதலீட்டாளர்கள் நாணயத் கொள்கை தளர்த்தல் சுழற்சியின் இறுதியில் தமது முதலீடுகளை மீளப்பெறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம்.

ஒட்டுமொத்தமாக இலங்கையின் பங்குச் சந்தையானது நிலையான வெளிநாட்டு வெளிப்பாய்ச்சல்களினால் சான்றுபடுத்தப்பட்டவாறு பற்றாக்குறையான வெளிநாட்டு பங்கேற்பினை முன்னிலையாகக் கொண்டு பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றது. தாமதமான அத்துடன் நிச்சயமற்ற கொள்கை சார்ந்த வழிமுறைகள், உள்நாட்டு நாணயம் தேய்வடைதல், பன்முகப்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்கள் குறைவு அதேபோன்று வேறு உலகளாவிய காரணிகள் போன்ற நாட்டிற்குக் குறிப்பான பிரச்சனைகள் இதற்குக் காரணமாக இருந்து வருகின்றன.

மேலும், சந்தையின் உள்ளார்ந்த ஆற்றலை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாகவும் அதிர்வுகளை எதிர்த்து நிற்பதற்கான அதன் இயலுமையாகவும் பொருளாதாரத்தின் அளவு தொழிற்படுகின்றது. பொருளாதார அளவின் அநுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பங்குச் சந்தைகள் கணிசமான எண்ணிக்கையாக பட்டியலிடப்பட்ட கூட்டுநிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களை வேண்டிநிற்கின்றது. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது சந்தை மூலதனவாக்கப் பெறுமதி, சராசரி நாளாந்தப் புரள்வு மற்றும் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை என்ற நியதிகளில் அதற்கு இணையான பரிவர்த்தனைகளின் மத்தியில் சிறிதாகக் காணப்படுவதுடன் அதன் போட்டித்தன்மையினை வரையறுத்து உலகளாவிய அதிர்வுகளுக்கு அது மிகவும் பாதிக்கப்படக்கூடிய தன்மைக்குள்ளாகச் செய்கிறது. குறைந்தளவான புதிய பட்டியலிடுதல்களின் எண்ணிக்கை, குறைவான முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் நாட்டிற்கே உரித்தான பிரச்சனைகள் என்பன காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்களால் முதலீடுகள் அகற்றப்படுதல் இலங்கைப் பங்கு சந்தையின் விரிவடைதலுக்கு சில தடைகளாகக் காணப்பட்டன. அண்மைய ஆண்டு காலப்பகுதியில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதனவாக்கப் பெறுமதி ஏறத்தாழ 20 சதவீதமாக தேக்கமடைந்துள்ளது. எனினும், 2014ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதனவாக்கப் பெறுமதியின் இவ்வீழ்ச்சிப் போக்கினை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை 2020 மற்றும் 2021ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் திரும்பலடையச் செய்தது. கொவிட்-19 தொடர்புபட்ட அபிவிருத்திகளின் காரணமாக வீழ்ச்சியடைகின்ற மொ.உ.உற்பத்திக்கு மத்தியில் மேம்பட்ட சந்தைச் செயலாற்றம் இரண்டினதும் பெறுபேறாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மேம்பட்ட சந்தை மூலதனவாக்கப் பெறுமதி அமைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக, கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் சந்தைத் திரவத்தன்மையும் வினைத்திறனும் பிராந்தியத்திலுள்ள ஏனைய பங்குப் பரிவர்த்தனைகளுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு குறைவாகக் காணப்பட்ட புரள்வு வேக விகிதத்தில் பிரதிபலிக்கப்பட்டவாறு ஒப்பீட்டளவில் குறைவான மட்டத்தில் காணப்படுகின்றன.


சந்தையின் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு முட்டுக்கட்டையாக இருந்து வருகின்ற மரபுசார்ந்த சாதனங்களையே கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை பிரதான அம்சங்களாகக் கொண்டுள்ளது. பெறுதிகள்

**வரைபடம் 5: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனைக்கான தேறிய வெளிநாட்டுப் பாய்ச்சல்கள்**




மூலம்: கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, பிட்ச் றேட்டிங், வர்த்தகப் பொருளியல்

வரைபடம் 6: உலகளாவிய பங்குச் சந்தைகளின் ஒப்பீடு[15]




மூலம்: உலக வங்கி

உள்ளடங்கலாக புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு அபரிமிதமான சாத்தியப்பாடுகள் காணப்படுகின்றன. இதனை ஓரளவிற்குத் தீர்ப்பதில் உண்மைச் சொத்துத் துறையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கு முதலீட்டாளர்களை இயலச்செய்கின்ற அதேவேளையில் உண்மைச் சொத்து அபிவிருத்தியாளர்களுக்குப் புதிய நிதியிடல் வழிமுறைகளை திறந்து விடுகின்ற உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்பு உள்ளடங்கலாக கடந்த காலங்களில் பல்வேறு உற்பத்திகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையானது தற்போது நான்கு வழங்கல்களைக் கொண்டுள்ளது. அவையாவான 1) பங்குரிமை மூலதனம், 2) நிறுவனப் படுகடன், 3) மூடப்பட்ட இறுதி நிதியங்கள்[16] மற்றும் 4) உண்மைச் சொத்து முதலீட்டு நம்பிக்கைப் பொறுப்புக்கள் என்பனவாகும். புதிய பட்டியலிடுதல் அல்லது ஆரம்பப் பொது வழங்கல்[17] குறைவும் மற்றுமொரு பாரிய சவாலாகக் காணப்பட்டது. 2020 மற்றும் 2021 ஆண்டு காலப்பகுதியில் பட்டியலிடுவதற்காக கம்பனியின் பரந்த நோக்கினை இயலச்செய்வதற்கு பங்குகளின் ஆரம்பப் பட்டியலிடுவதற்கான தகைமைப் பிரமாணத்தை விரிவுபடுத்தல் போன்ற புதிய பட்டியலிடுதலை ஊக்குவிப்பதற்கு கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தது. இம்முயற்சியானது நாட்டின் இயக்கவாற்றல் மிக்க கூட்டுநிறுவனத் துறையினால் ஈடுபடுத்தப்படும் பல்துறை தொழில் மாதிரிகளைக் கருத்திற்கொண்டு மேலும் விரிவுபடுத்துவதற்கு நிதியங்களைத் திரட்டுவதற்கு உள்நாட்டுக் கம்பனிகளை இயலச்செய்யும் விதத்தில் எடுக்கப்பட்டிருந்தன.

பின்னடைவுடன் தொடர்புபட்ட சில முக்கிய உட்கட்டமைப்பும் அண்மைய ஆண்டு காலப்பகுதியில் தீர்க்கப்பட்டன. இலங்கைப் பங்குச் சந்தையினை டிஜிட்டல்மயப்படுத்தியமை அனைத்து ஆர்வலர்களும் இலத்திரனியல் ரீதியாக இணைவதற்கு இயலச்செய்தது. இது, முதலீட்டாளர்களுக்கு கணிசமான வசதியினை வழங்கியதுடன் அனைத்து ஆர்வலர்களுக்கும் குறிப்பிடத்தக்க தொழிற்பாட்டு வினைத்திறன்களையும் விளைவித்தது. இதற்கு மேலதிகமாக, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு முன்மொழியப்பட்ட பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை சட்டத்தினை இறுதிப்படுத்தும் செயன்முறையினை முன்னெடுக்குகின்றது. மூலதனச் சந்தையின் அபிவிருத்தியினை வசதிப்படுத்தும் பொருட்டு ஏற்கனவே காணப்படும் சட்டங்களிலுள்ள பொருள்மயக்கத்தைக் குறைப்பதற்கும் ஆற்றல்வாய்ந்த ஒழுங்குமுறைப்படுத்தலை உறுதிசெய்வதற்கும் இச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.

### பங்குச் சந்தைகளின் எதிர்காலம்

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது உலகம் முழுவதிலுமுள்ள பங்குச் சந்தைகளின் அபிவிருத்திக்கு எதிர்பாராத சவால்களை கொண்டு சேர்த்தது. கொவிட்-19

15 2020 இறுதியிலுள்ளவாறான பெறுமதிகள். கோளத்தின் அளவு மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக சந்தை மூலதனப் பெறுமதி விகிதசமமாகும்.

16 மூடப்பட்ட இறுதி நிதியம் என்பது ஆரம்பப் பொது வழங்கல் ஒன்றினூடாக நிலையான பங்குகளின் எண்ணிக்கையினை அதிகரிக்கின்ற சேர்க்கப்பட்ட சொத்துக்களின் சொத்துப்பட்டியலொன்றாவதுடன் பின்னர் பங்குப் பரிவர்த்தனையின் மீது வர்த்தகத்திற்காக பங்குகளைப் பட்டியலிடுகின்றது.

17 ஆரம்பப் பொது வழங்கல் என்பது புதிய பங்கு வழங்கலூடாக முதற்றடவையாக தனியார் கம்பனியொன்றின் பங்குகளை பொதுமக்களுக்கு வழங்கும் செயன்முறையாகும்.

உலகளாவிய நோய்த்தொற்று இலங்கை போன்ற அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் எதிர்கொள்கின்ற பொருளாதாரச் சவால்களைத் தீவிரமடையச் செய்துள்ளது. மேலும், விரிவடைகின்ற இறைப் பற்றாக்குறை உள்ளடங்கலாக பேரண்டச் சூழலில் காணப்படுகின்ற சீர்குலைவு, நிச்சயமற்ற தன்மை காரணமாக முதலீட்டாளர் ஏற்றுக்கொள்ளலில் வீழ்ச்சி, பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதற்கு அரசாங்கங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அதிகளவான தலையீடுகள் என்பன சந்தைகளின் சீரான தொழிற்படுத்தலைச் சவாலுக்குள்ளாக்குகின்றவற்றில் சிலவாகும். எதிர்பாராத சவால்களை எதிர்கொள்வதில் அரசாங்கங்களினால் எடுக்கப்படுகின்ற இவ்வதிவிசேட வழிமுறைகள் பங்குச் சந்தையின் உறுதிப்பாடு மற்றும் முதலீட்டாளர் நம்பிக்கை என்பவற்றை உறுதிசெய்வதற்கு இன்றியமையாததாகக் காணப்படுவதாயினும் இக்கொள்கை வழிமுறைகளின் நீண்ட காலத் தாக்கங்கள் நடந்தேறுவதற்கு காலமுள்ளது. அத்தகைய வழிமுறைகளில் திடீர் மாற்றங்கள் சந்தையின் சடுதியான தளம்பல்களுக்கு வழிவகுக்கலாம். எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது சந்தையின் சீரான தொழிற்பாட்டினை உறுதி செய்வதற்கு ஆற்றல்வாய்ந்த உட்கட்டமைப்பு முறைமைகளை அபிவிருத்திசெய்து முதலிடுவதற்கு பங்குச் சந்தைகளை இயலச்செய்துள்ளது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று தொடர்கின்றமை இலங்கையில் பங்குச் சந்தையின் செயலாற்றத்திற்குச் சவாலொன்றினைத் தோற்றுவிக்கின்றது. எதிர்கால வாய்ப்புக்கள் நிச்சயமற்றதாகவும் சந்தைகள் தளம்பல்மிக்கதாகவும் காணப்படுகின்றன. உள்நாட்டிலும் உலகளவிலும் கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றை விரைவாகக் கட்டுப்படுத்துகின்றமை பேரண்டப் பொருளாதாரச் சமநிலைமைகளை மீளமைப்பதற்கு உதவும் என்பதுடன் முதலீட்டாளர் நம்பிக்கையினைக் கட்டியெழுப்பும். இதன் பயனாக அண்மைய எதிர்காலத்தில் இலங்கைப் பங்குச் சந்தையின் அபிவிருத்திக்கு இது இன்றியமையாததாகக் காணப்படும்.

மேலும், பேரேட்டுத் தொழில்நுட்பங்கள் போன்ற தொழில்நுட்ப (Block Chain Technologies) ரீதியான முன்னேற்றம் நவீனப் பங்குச் சந்தைப் பரிவர்த்தனைகளுக்குப் புதிய பாதைகளைத் திறந்துவிடும். இலண்டன் பங்குப் பரிவர்த்தனை போன்ற மிகவும் முன்னேற்றமடைந்த பரிவர்த்தனைகள் ஏற்கனவே, பேரேட்டுத் தொழில்நுட்பம் மீதான தளமொன்றினை உருவாக்கி புதிய மற்றும் புத்தாக்கமிக்க தொழில்நுட்பங்களைப் பின்பற்றுகின்றன. இது, மிகவும் வினைத்திறன்மிக்க விதத்தில் அதன் குறிக்கோள்களை எய்துவதற்கு அதிக தொழில்நுட்பம் நாட்டம் கொண்ட இளம் தலைமுறையினரைக் கவருவதன் வாயிலாக பங்குப் பரிவர்த்தனைகள் எதிர்காலத்தில் பயணிப்பதை இயலச்செய்யும்.

**உசாத்துணைகள்**


Andrew, B., 2021. The Birth of Stock Exchanges. [online] Investopedia. Available at: <https://www.investopedia.com/articles/07/stock-exchange-history.asp.> [Accessed 13 February 2021].

Colombo Stock Exchange, 2020. The Annual Report 2019. Colombo: Colombo Stock Exchange.

Colombo Stock Exchange, 2021. Colombo Stock Exchange. [online] Available at: <https://www.cse.lk/> [Accessed 7 August 2021].

Harper, D., 2020. Getting to Know the Stock Exchanges. [online] Investopedia. Available at: <https://www.investopedia.com/articles/basics/04/092404.asp> [Accessed 15 February 2021].

International Finance Corporation, 2020. Capital Market Development, A Primer for Policymakers. [online] World Bank Group. Available at: <https://www.ifc.org/wps/wcm/connect/corp_ext_content/ifc_external_corporate_site/home> [Accessed 12 March 2021].

The Central Bank of Sri Lanka, 2010 - 2021. The Annual Reports 2009- 2020. Colombo: The Central Bank of Sri Lanka.

The Central Bank of Sri Lanka, 2019 - 2021. The Financial System Stability Report 2018- 2020. Colombo: The Central Bank of Sri Lanka.

Potters, C., 2021. How to Measure the Total Stock Market. [online] Investopedia. Available at: <https://www.investopedia.com/ask/answers/04/042304.asp> [Accessed 12 March 2022].

World Federation of Exchanges, 2017. The Role of Stock Exchanges in fostering Economic Growth and Sustainable Growth. The Untitled Nations Conference on Trade and Development(UNCTA).

# இலங்கையில் காலநிலை அதிர்வுகளை எதிர்கொள்வதற்கான அனர்த்த மீட்புக் கடன் திட்டம்

அமில எஸ். பர்னாந்து
மூத்த உதவிப் பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

1. அறிமுகம்

உலகளாவிய ரீதியில் இயற்கை அனர்த்தங்கள் பரந்தளவில் முக்கிய நிகழ்வொன்றாக மாறி வருவதுடன் முக்கியமாக மிகவும் அடிக்கடி நிகழ்தல், பாரியளவிலான தாக்கம், அனர்த்தத்தால் பாதிக்கப்படுகின்ற நாடுகளின் ஆயத்தமற்ற நிலை போன்றவற்றின் காரணமாக இவற்றின் தாக்கம் அண்மைய காலத்தில் துரிதமாக அதிகரித்துவருவதைக் காணக்கூடியதாகவுள்ளது. உலகளாவிய ரீதியில் காணப்படுகின்ற பொருளாதாரம் மற்றும் பல்லாயிரக்கணக்கான மக்களின் வாழ்க்கை என்பவற்றின் வளர்ச்சிக்கான அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற காலநிலை மாற்றம் மூலம் இத்தகைய அனர்த்தங்கள் தூண்டப்படுகின்றன. வறிய மக்கள், சிறு வேளாண்மையாளர்கள், மீனவச் சமூகத்தினர் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சியாளர் ஆகியோர் இயற்கை அனர்த்தங்களால் அடிக்கடி கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். அநேகமான இயற்கை அனர்த்தங்கள் தவிர்க்க முடியாதவையாக காணப்படுவதனால், அனர்த்த மீட்புக் கடன் திட்டங்களை தாபிப்பதனூடாக இப்பிரச்சினையைத் தீர்த்தலென்பது மீளெழுச்சி வாய்ந்த சமூகங்களை உருவாக்குவதற்கான வேறு ஈடுகொடுக்கக்கூடிய பொறிமுறைகளுக்கு மத்தியில் சிறந்ததொரு நடைமுறையாகும்.

2. காலநிலை அதிர்வுகள்: உலகளாவிய பின்னணி

இயற்கை தீங்குகளால் உருவாகின்ற மொத்த இழப்புக்களானது 1980களில் சராசரியாக ஆண்டொன்றிற்கு ஐ.அ.டொலர் 18 பில்லியனிலிருந்து கடந்த தசாப்தமாக ஆண்டொன்றிற்கு சராசியாக ஐ.அ.டொலர் 167 பில்லியன் வரை 800 சதவீதமாக அதிகரித்துள்ளது என்பதை உலக வங்கியின் அனர்த்த இடர்நேர்வு முகாமைத்துவக் கண்ணோட்டம் எடுத்துரைக்கின்றது. மேலும், உலகளாவிய ரீதியில் இயற்கை தீங்குகளால் எழுகின்ற அனர்த்தங்களின் காரணமாக கடந்த 40 ஆண்டுகளில், 2.4 மில்லியனுக்கும் மேலதிகமான மக்களின் உயிரும் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 3.7 றில்லியன் பெறுமதி கொண்ட சொத்துக்களும் இழக்கப்பட்டுள்ளதுடன் (அனர்த்த இடர்நேர்வு முகாமைத்துவத் கண்ணோட்டம், 2022) இதன் விளைவாக, இத்தகைய சமூகத்தின் வாழ்வாதாரங்களுக்கும் வறுமை மீதும் குறிப்பிடத்தக்க நீடித்த தாக்கங்களையும் ஏற்படுத்தியிருந்தன. விரைவானதும் அனைத்தையுமுள்ளடக்கியதும் காலநிலை சார்ந்து அறிவிக்கப்பட்டதுமான அபிவிருத்தி குறுங்காலத்தில் இடம்பெறவில்லையாயின் 2030ஆம் ஆண்டளவில் மேலும் 100 மில்லியன் மக்கள் கடுமையான வறுமைக்குள் தள்ளப்படுவதற்கான அச்சுறுத்தலை காலநிலை மாற்றம் தோற்றுவிக்கும் என்பதை அனர்த்த குறைப்பு மற்றும் மீட்புக்கான உலகளாவிய வசதி மூலம் நிதியளிக்கப்படும் உலக வங்கி அறிக்கை காண்பிக்கின்றது (ஹலீகேட் மற்றும் ஏனையோர், 2016). நிலக்கரி, எண்ணெய் மற்றும் எரிவாயு போன்ற உயிர்ச்சுவட்டு எரிபொருட்களை எரிப்பதன் காரணமாக வெப்பநிலை மற்றும் வானிலையின் போக்கு என்பவற்றில் நீண்ட கால மாறுதலடைகின்ற காலநிலை மாற்றமானது இயற்கை அனர்த்தங்களை அடிக்கடி அதிகரிக்கின்றது (ஐக்கிய நாடுகள் - காலநிலை நடவடிக்கை). பல எண்ணிக்கையிலான இயற்கை அனர்த்தங்களின் அதிகரிப்பு மற்றும் வளிமண்டல உறை காலநிலை மாற்றத்திலுள்ள பச்சைவீட்டு வாயுக்களில் மனிதனால் ஆக்கப்பட்ட புகை வெளியேற்றம் என்பவற்றிற்கிடையிலான தொடர்பொன்றை காலநிலை தொடர்பான அனர்த்தங்களின் அதிகரிப்பு தொடர்பில் தோமஸ் அன்ட் எல்எல்பெஸ் என்பவரினால் எழுத்தப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் பரிந்துரைக்கின்றார்.

உலகில் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோரில் 77 சதவீதமானோர் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திலேயே வாழ்கின்றனர் என்பதை ஐக்கிய நாடுகள் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் அறிக்கை 2022 எடுத்துரைக்கின்றது. இதற்கமைய 2015இலிருந்து 2019 வரையான காலப்பகுதியில் பிராந்தியம் முழுவதும் அனர்த்தங்கள் 700 மில்லியன் மக்களை பாதித்ததுடன் 44,000 உயிர் இழப்புக்களை தோற்றுவித்த அதேவேளை 3.5 மில்லியன் மக்களுக்கு தமது இல்லங்களை இழக்கச்செய்து ஐ.அ.டொலர் 286 பில்லியன் பெறுமதி கொண்ட ஆதனங்கள் முற்றாக சேதமடையச்செய்துள்ளன. 2020 அளவில், இயற்கை அனர்த்தங்களின் காரணமாக பிலிப்பைன்ஸ் நாட்டில் தற்காலிகமாக இடம்பெயர்ந்த 4.4 மில்லியன் மக்கள் உட்பட அனர்த்தங்களால் புதிதாக இடம்பெயர்ந்த உலகக் குடித்தொகையினரில் 69 சதவீதமானோர் ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்தில் வசிக்கின்றனர். உலகளாவிய மனிதாபிமான கண்ணோட்டம் 2022 குறிப்பிடப்பட்டதற்கமைவாக காலநிலை மாற்றத்தின் விளைவாக, வெப்பஅலைகள், வறட்சி, வெள்ளப்பெருக்கு, அயனச் சூறாவளி அடிக்கடி இடம்பெறுவதாகவும் தீவிரமானதாகவும் தோற்றம்பெற்று வருகின்றன.

உலக வளிமண்டலவியல் அமைப்பின் படி, காலநிலையுடன் தொடர்பான அனர்த்தங்களானது பொருளாதாரத்திற்கு அதிகளவான சேதத்தை விளைவித்து ஆனால் குறைந்தளவான இறப்புக்களை தோற்றுவித்து (உலக வளிமண்டலவியல் அமைப்பு 2021ஆ) கடந்த 50 ஆண்டுகளாக அதிகரித்துள்ளன. வானிலை, காலநிலை, அல்லது நீர் சார்ந்த அபாயங்கள் என்பவற்றுடன் தொடர்புடைய அனர்த்தமானது கடந்த 50 ஆண்டுகளில் சராசரியாக ஒரு நாளுக்கு நாளாந்தம் 115 மக்களை கொன்று ஐ.அ.டொலர் 202 மில்லியன் பொருளாதார இழப்பைத் தோற்றுவித்து தினந்தோறும் இடம்பெற்றவண்ணமுள்ளது (உலக வளிமண்டலவியல் அமைப்பு, 2021அ). சொல்லப்பட்ட அறிக்கைக்கமைவாக கடந்த 50 ஆண்டுகளில் காலநிலை மாற்றம், அதிதீவிர வானிலை நிலைமைகள் மற்றும் மேம்படுத்தப்பட்ட அறிக்கையிடல் என்பவற்றால் தூண்டப்பட்டு ஐந்து காரணிகளால் பல எண்ணிக்கையிலான அனர்த்தங்கள் அதிகரித்துள்ளன. எவ்வாறாயினும், மேம்படுத்தப்பட்ட முன்கூட்டிய எச்சரிக்கை மற்றும் அனர்த்த முகாமைத்துவ நெறிமுறைகள் மற்றும் நடத்தைகள் என்பவற்றின் காரணமாக இத்தகைய அனர்த்தங்களால் எழுகின்ற இறப்புக்களின் எண்ணிக்கை மும்மடங்கு குறைவடைந்துள்ளன (உலக வளிமண்டலவியல் அமைப்பு, 2021அ).


### 3. காலநிலை அதிர்வுகள்: இலங்கையின் பின்னணி

உலக வங்கியின் குறிப்பிடுவதற்கமைவாக, 2017இல் தீவிரமான வானிலை நிலைமைகளால் பாதிக்கப்பட்ட ஏராளமான நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்திலுள்ளது. காலநிலை மாற்றத்தால் ஏற்பட்ட வானிலை நிலைமைகளின் காரணமாக இலங்கை 2050 அளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 1.2 சதவீத இழப்பை அனுபவிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது என்று உலக வங்கி மதிப்பீடு செய்துள்ளது. இவ்வறிக்கைக்கு அமைவாக, 2010இலிருந்து 2018 வரையான காலப்பகுதியில் நாட்டில் நிலவிய வெள்ள நிலைமைகள் 14 மில்லியன் மக்களைப் பாதித்துள்ளதுடன் நாட்டில் நிலவிய வறட்சி நிலைமைகள் 12 மில்லியன் மக்களைப் பாதித்துள்ளன (உலக வங்கி, 2019). இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாகக் காணப்படுகின்ற இலங்கையானது, பருவமழை வீழ்ச்சியின் காரணமாக அடிக்கடி ஏற்படும் இடர்களுடன் தொடர்புடைய வானிலையால் பாதிக்கப்படுகின்றது என்பதை அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் தயாரிக்கப்படும் இலங்கையின் இடர்த் தொகுப்பு எடுத்துரைக்கின்றது. பருவமழை வீழ்ச்சி காலத்தில் அதிகளவாக பெய்கின்ற மழையிலிருந்து ஏற்படும் வெள்ளப்பெருக்கு மற்றும் மழைவீச்சி கிடைக்கப்பெறாமல் ஏற்படும் வறட்சி ஆகியவையே இலங்கை அனுபவிக்கின்ற இடர்களாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், நாட்டின் புறநகர் மற்றும் நகரப் பகுதியில் ஏற்படும் கடுமையான வெள்ளப்பெருக்கிற்கு மத்தியில் உயர்ந்தளவில் கணிக்கமுடியாத வானிலைப் போக்குகளும் மிதமிஞ்சிய மழைவீழ்ச்சியை விளைவிக்கின்றது. நகரப்புறத்தில் இடம்பெறுகின்ற திட்டமிடப்படாத நிர்மாணங்கள் இதற்குப் பகுதியளவான காரணமாக அமைகின்றது. மேலும், நிலச்சரிவுகள், மின்னல் தாக்கம், கரையோர மண்ணரிப்பு, நோய்த்தொற்றுக்கள் மற்றும் சூழல் மாசடைதலின் விளைவுகள் போன்ற தீங்குகளை இலங்கை எதிர்கொள்ள வாய்ப்புள்ளது.

1974இலிருந்து 2004 வரையான காலப்பகுதியில் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்படும் மக்கள் பற்றிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு (கீழேயுள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது) வெள்ளப்பெருக்கு, வறட்சி, சுனாமி, புயல் மற்றும் நிலச்சரிவுகள் என்பன இலங்கையில் அநேகமாக இடம்பெறுகின்ற பிரதான இயற்கை அனர்த்தங்களாக இனங்காணப்பட்டுள்ளன.

2004இல் இந்து சமுத்திரத்தை தாக்கிய பயங்கர சுனாமியானது, கரையோரத்தில் வாழும் ஏறத்தாழ மூன்றில் இரண்டு இலங்கையர்களின் ஆதனங்களுக்கு சேதமிழைத்து 35,000 உயிர்களைக் காவுகொண்டது. உலக வங்கியின் அறிக்கைக்கமைவாக (உலக வங்கி, 2014) 400,000இற்கும் மேற்பட்ட மக்கள் வீடுகளை இழந்ததுடன் ஏறத்தாழ

**வரைபடம் 1: இலங்கையில் பல்வேறு அனர்த்தங்களால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கை**




**மூலம்:** அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

250,000 குடும்பங்கள் வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். சொத்துக்களில் ஐ.அ.டொலர் 1 பில்லியன் இழப்பையும் சாத்தியமான வெளியீடுகளில் ஐ.அ.டொலர் 330 மில்லியன் பாதிப்பையும் தோற்றுவித்த சுனாமியே இலங்கை வரலாற்றில் மிகவும் பேரழிவான இயற்கை அனர்த்தம் என்பதை அரசாங்கம் மதிப்பீடு செய்துள்ளது. உலக வங்கியின் அறிக்கைக்கு அமைவாக, 110,000 வீடுகள் சேதங்களுக்குள்ளானதுடன் இதில், 70,000 வீடுகள் அழிக்கப்பட்டன (உலக வங்கி, 2014). நாட்டில் பாதிக்கப்படும் தன்மையானது அடிக்கடி இடம்பெறாதிருந்தாலும் உயர்வான தாக்கம் கொண்ட நிகழ்வுகளை கொண்டுள்ளது என்பதை இச்சம்பவம் எடுத்துரைக்கின்றது.

2016இலிருந்து 2017 வரையான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் தனியாட்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பிற்கு மத்தியில் 2019இலிருந்து இச்சூழ்நிலை தளர்ந்துள்ளது என்பதை தேசிய அனர்த்த நிவாரண பணிகள் மையத்தின் 2016-2021இலிருந்தான அனர்த்த சூழ்நிலை தொகுப்பு அறிக்கைகள் எடுத்துரைக்கின்றன.

உலக வங்கியின் ஆய்விற்கமைவாக, 2017இன் மேயில் நிகழ்ந்த வெள்ளப்பெருக்குகளும் நிலச்சரிவுகளும் இலங்கையில் 15 மாவட்டங்களை பாதித்ததுடன் 213 இறப்புக்களைத் தோற்றுவித்து 88,000 வீடுகளுக்கு பகுதியளவாகவோ அல்லது முற்றாகவோ சேதத்தை ஏற்படுத்தியது. மேலும், 100,000இற்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்த அதேவேளை உச்ச இறுதியில் மொத்தப் பொருளாதார இழப்பு ரூ.70 பில்லியனாகும். மேலும், 2016 மற்றும் 2017ஆம் ஆண்டுகளில் நிலவிய வறட்சி நிலைமைகள் இலங்கையிலுள்ள 17 மாவட்டங்களில் 1,927,069 எண்ணிக்கையிலான மக்களை பாதித்ததுடன் பெரும்போகத்தில் பயிரிடப்பட்ட 612,224 ஹெக்டெயர் நெல் வயல்களில் 50,615 ஹெக்டயர்களை பாதித்தது (உலக வங்கி, 2017).

2016இன் நடுப்பகுதியில் இடம்பெற்ற கடுமையான வெள்ளத்தினால் கொழும்பு மாவட்டத்திலுள்ள நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளும் கடுமையாக பாதிப்படைந்தன. பொருளாதாரத்தின் நோக்கில் குறுங்காலத்தில், சாதன இழப்பு அல்லது சிதைவே வெள்ளத்தினால் ஏற்பட்ட உயர்ந்தளவான சேதமாக காணப்பட்டது என்பதை இவ்வாய்வு கண்டறிந்துள்ளது. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளில் ஏறத்தாழ மூன்றில் இரண்டு தொழில்முயற்சிகள் தமது சாதனங்களை முற்றிலும் இழந்துள்ளது/ சிதைவடைந்துள்ளது என்பதுடன் பதிவுகள் இழப்பு குறைந்தளவான தாக்கமொன்றைச் செலுத்தியுள்ளது.

இடையூறுக்குள்ளான காசுப்பாய்ச்சல் மற்றும் வருமான இழப்புகள் என்பன கட்டடங்களுக்கு கட்டமைப்பு சார்ந்த சேதங்களை ஏற்படுத்துவன் மூலம் நீண்டகாலத்தில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை பாதித்தன (சமந்த, 2018).

பாதிக்கப்பட்டோரில் ஏறத்தாழ 12 சதவீதமானோர் வறியோராக காணப்பட்டதுடன் இவர்கள் 6.7 சதவீதமாக ஏறத்தாழ தேசிய சராசரியின் இரட்டிப்பாக காணப்பட்டனர். நிலச்சரிவுகளைப் பொறுத்தவரையில், 11 பாதிப்படைந்த பிரதேச செயலகப்

**அட்டவணை 1: அனர்த்தங்களின் காரணமாக பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் ஆட்கள் 2016 - 2021**

| ஆண்டு | பாதிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2016 | 530,963 | 1,850,308 |
| 2017 | 1,415,650 | 5,074,061 |
| 2018 | 744,693 | 2,673,243 |
| 2019 | 511,036 | 1,823,560 |
| 2020 | 310,742 | 1,149,945 |
| 2021 | 247,750 | 930,992 |

**மூலம்:** அனர்த்த சூழ்நிலை தொகுப்பு அறிக்கைகள், தேசிய அனர்த்த நிவாரண பணிகள் மையம்

பிரிவுகள் தேசிய சராசரியை விடவும் குறைவான போக்கைக் கொண்டிருந்தது. ஒட்டுமொத்தமாக, வெள்ளப்பெருக்கினால் பாதிப்படைந்தவர்கள் 8.7 சதவீதமாக மதிப்பீடு செய்யப்பட்ட வறுமை வீதத்துடன் விகிதாசரமற்ற வறியவர்களாகவும் காணப்பட்டனர். இயற்கை அனர்த்தங்களின் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கங்கள் ஆகிய இரண்டும் வியாபார நடவடிக்கைகளுக்கும் தொடர்ச்சிகளுக்கும் அழிவை ஏற்படுத்துகின்றது (சமந்த, 2018). சமந்த குறிப்பிட்டதற்கமைவாக (2018), இத்தகைய பேரழிவு நிகழ்வுகளானது அண்மைய காலத்தில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் உள்ளடங்கலாக அநேகமான வியாபார நிறுவனங்கள் மீது கணிசமான எதிர்மறையான தாக்கத்தை உருவாக்கியுள்ளன.

### 4. காலநிலை அதிர்வுகளை எதிர்கொள்வதற்காக இலங்கைக்கு அனர்த்த மீட்பு கடன் திட்டத்தின் முக்கியத்துவம்

அண்மைக் காலத்தில் இயற்கை அனர்த்தங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றமை மற்றும் அத்தகைய அனர்த்தங்களின் தீவிரம் என்பன நாட்டில் சிறு வேளாண்மையாளர்களுக்கும் மீனவச் சமூகங்களுக்கும் அத்துடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கும் ஆதரவளிப்பதற்கு அனர்த்த மீட்புக் கடன் திட்டம் ஒன்றிற்கான முக்கியத்துவத்தையும் தேவையையும் அதிகரிக்கின்றது. இத்தகைய கடன் திட்டத்தினால் வழங்கப்படும் நிதியியல் உதவியானது இத்தகைய இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்திலிருந்து பாதிக்கப்பட்ட சிறு வேளாண்மையாளர்கள், மீனவச் சமூகங்கள், அத்துடன் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் என்பன விரைவாக மீட்சியடைவதற்கு ஆதரவளிக்கும். பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்கள் வேளாண்மையுடன் தொடர்புடைய தமது கடன்களிலிருந்து எதிர்காலத்திலிருந்து மீளுவதற்கும் நிதியியல் உதவி மேம்படுத்தப்படும்.

### 5. இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட அனர்த்த மீட்பு கடன் திட்டங்கள்

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டோரின் வாழ்வாதாரம் தொடர்பான தாக்கத்தை கருத்திற்கொண்டு, அரசாங்கம், இலங்கை மத்திய வங்கி மற்றும் பல்வேறு கொடையாளி முகவர்கள் என்பவற்றின் நிதியிடலுடன் பத்து கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 2004 திசெம்பர் 26ஆம் நாளன்று இடம்பெற்ற இந்து சமுத்திர சுனாமியின் காரணமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இலங்கையும் ஒரு நாடாக காணப்பட்டமையால், அத்தகைய அழிவை எதிர்கொள்வதற்காக அனர்த்தத்தின் பின்னர் ஏழு கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. சுனாமியால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளின் நடவடிக்கைகளை மீளத்தொடங்க வசதியளிப்பதற்காகவும் சுனாமிக்குப் பின்னரான மீள்கட்டுமாணப் பணிக்காகவும் ரூ.9,000 மில்லியன் தொகை கொண்ட கடன்களை இத்திட்டங்கள் கூட்டாக வழங்கியுள்ளன.

தொழிற்பாடுகளை மீளத்தொடங்குவதற்காக அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பெருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதற்கு வேளாண் அபிவிருத்திக்கான பன்னாட்டு நிதியத்தின் நிதியிடலுடன் தேசிய வேளாண்வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 2018இல் இலங்கை மத்திய வங்கியால் அனர்த்தத்திற்கு பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்பு கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ரூ.135 மில்லியன் தொகைகொண்ட கொடுகடன் வசதிகளை வழங்கிய பின்னர் இச்செயற்றிட்டம் முடிவுறுத்தப்பட்டது.

அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு ஏதேனும் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையை மீளத்தொடங்குவதற்கும் சலுகை நிதியியல் வசதிகளை வழங்குவதற்கு என்ற 2017இல் “அத்வெல” என்ற அனர்த்ததால் பாதிக்கப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் மீள்தொடக்கக் கடன் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அரசாங்கம், இலங்கை மத்திய வங்கி, மற்றும் பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்கள் ஆகியன இத்திட்டத்தை அமைப்பதற்கு பிணையப்படுத்தும் தரப்பினர்களாக காணப்பட்டனர். அரசாங்கமானது இச்செயற்றிட்டத்திற்காக தொடர்ந்தும் நிதியை வழங்கியதுடன் அனர்த்த பிரதேசங்களும் அரசாங்கத்தினால் வரையறுக்கப்பட்டது. இக்கடன் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட சிறியளவு வியாபாரங்கள் மற்றும் சுயதொழில் வியாபாரங்கள் மீது விசேட கவனத்தைச் செலுத்துகின்றது.

2018ஆம் ஆண்டுக் காலப்பகுதியில், 2017இன் 4 மாத தொழிற்பாடுகளில் ரூ.100 மில்லியன் தொகையுடன் ஒப்பிடுகையில் ரூ.1,500 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டது. 2019ஆம் ஆண்டுக் காலப்பகுதிக் கடன்களில் ரூ.303 மில்லியன் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டன. கடன்கள் ஆண்டிற்கு 02 சதவீத உயர்ந்தபட்ச வட்டி வீதத்தில் வழங்கப்பட்டதுடன் ரூ.500,000 தொகை உயர்ந்தபட்ச வரம்பாக காணப்படுகின்றது. 6 மாத சலுகைக் காலம் உட்பட 3 ஆண்டுகள் கடனின் முதிர்ச்சிக் காலப்பகுதியாகும்.

முடிவுறுத்தப்பட்ட மற்றும் முன்னெடுக்கும் திட்டங்களின் விபரங்கள் அட்டவணை 2 மற்றும் 3இல் கீழே தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2: இலங்கையில் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் (முடிவுறுத்தப்பட்டது)

| செயற்றிட்டத்தின் பெயர் | மொத்த நிதி ஒதுக்கீடு (மில்.) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் (ரூ.மில்) |
|---|---|---|---|
| சுசஹன கடன் திட்டம் - நிதியியல் மற்றும் லீசிங் கம்பனி | இலங்கை ரூபா 353 | சுனாமியால் பாதிக்கப்பட்ட தொழில்முயற்சிகளை மீளத்தொடர்வதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு | 351 |
| சிறு வியாபார மீளெழுச்சி நிகழ்ச்சித்திட்டம் | இலங்கை ரூபா 2,656 | சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளத்தொடர்வதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு | 2,663 |
| சிறு வியாபார மீளெழுச்சி நிகழ்ச்சித்திட்டம் - சுழலும் நிதி | இலங்கை ரூபா 150 | சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளத்தொடர்வதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு | 123 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி ஒப்பந்தம் பீ | யூரோ 10 | சுனாமியால் நேரடியாக பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளஉருவாக்குவதற்கு | 1,553 |
| சுசஹன | இலங்கை ரூபா 3,000 | சுனாமியால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளத்தொடர்வதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு | 2,750 |
| சுசஹன கட்டம் II | இலங்கை ரூபா 500 | சுனாமியால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை மீளத்தொடர்வதற்கான கொடுகடன் வசதிகளை வழங்குவதற்கு | 106 |
| கட்டுமானத்துறை அபிருத்தித் திட்டம் | யூரோ 9 | சுனாமிக்குப் பின்னரான கட்டுமாணத்துறையில் கட்டுமானம் மற்றும் பொதுப் பணிகளில் வினைத்திறனாக பங்கேற்புச் செய்வதற்கு தனியார் உள்நாட்டு வியாபாரங்களில் நிதியியல் மற்றும் தொழில்நுட்ப இயலாற்றல்களை வலுப்படுத்துவதற்கு | 1,400 |
| அனர்த்தத்திற்கு பின்னரான பொருளாதார நடவடிக்கை மீட்பு கடன் திட்டம் | இலங்கை ரூபா 135 | அண்மைய வெள்ளப்பெருக்கு/ வறட்சியால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள்/ சிறு தொழில்முயற்சிகளின் அனர்த்தத்திற்குப் பின்னரான மீட்பு முயற்சிகளில் அவர்களின் வியாபாரங்களை அல்லது வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை தொடர்வதற்கான தேவைப்பாடுகளின் நிதியங்களை வழங்குவதன் மூலம் கடன்பாட்டாளர்களுக்கு ஆதரவளிப்பதற்காக | 135 |

மூலம்: ஆண்டறிக்கை 2020 - இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 3: இலங்கையில் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கடன் திட்டங்கள் (முன்னெடுக்கப்படுபவை)**

| செயற்றிட்டத்தின் பெயர் | மொத்த நிதி ஒதுக்கீடு (இலங்கை ரூபா) | கடனின் நோக்கம் | பங்கேற்கும் நிதியியல் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் (இலங்கை ரூபா) |
|---|---|---|---|
| சௌபாக்யா கடன் திட்டம்[1] | 32,061 | நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்குமான கொடுகடனை நீடிப்பதற்கு | 32,061 |
| அத்வெல கடன் திட்டம் | 2,000 | இலங்கை அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டவாறு ஏதேனும் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் பொருளாதார நடவடிக்கையை தொடர்வதற்கு தகைமையுள்ள உப கடன்பாட்டாளர்களுக்கு நிதியியல் கடன்வசதிகளை வழங்குதல். | 1,688 |

மூலம்: ஆண்டறிக்கை 2020 - இலங்கை மத்திய வங்கி

## 6. முன்னோக்கிய பாதை: இலங்கையில் அனர்த்த மீட்புக் கடன் திட்டங்களை நாம் எவ்வாறு மேம்படுத்தலாம்?

நாட்டில் அதிகரித்து வரும் எண்ணிக்கையிலான இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் சிறு வேளாண்மையாளர்கள், மீனவச் சமூகம் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் ஆகியோருக்கு உதவுவதற்கு முறையாக வடிவமைக்கப்பட்ட அனர்த்த மீட்புக் கடன் திட்டம் ஒன்றிற்கான தேவை கட்டாயமாகவுள்ளது. கடந்த காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அநேகமான அனைத்து வகையான திட்டங்களும் குறிப்பிட்ட இயற்கை அனர்த்தம் அல்லது பேராபத்தொன்றுடன் இணைக்கப்பட்டுள்ளன (உதாரணம்: 2004இல் இடம்பெற்ற சுனாமி). எவ்வாறாயினும், வெள்ளப்பெருக்கு, வறட்சி, புயல், நிலச்சரிவு, மின்னல் தாக்கம், கரையோர மண்ணரிப்புக்கள், நோய்த்தொற்றுக்கள் மற்றும் சூழல் மாசடைதலின் விளைவுகள் போன்ற வேறுபட்ட வழிகளினூடாக இயற்கை அனர்த்தங்கள் நடைபெறுகின்றன. மீட்பு முயற்சிகளை சமாளிப்பதற்கும் நிகழ்வில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் அரசாங்கம் வரவுசெலவுத்திட்டத்தில் நிதியங்களை ஒதுக்கீடு செய்த போதும் அவை நிகழ்வதற்கு ஏற்றவாறும் நிகழும்போதும் முன்னெடுக்கப்படுகின்ற அடிப்படையில் சமாளிப்பதற்கான நிதி காணப்படுவதில்லை. அனர்த்த மீட்புக் கடன்களை வழங்குவதற்காக நடைமுறையிலுள்ள முன்முயற்சிகளானது அவற்றின் பதிலிறுப்புக்களின் தற்காலிக இயல்பு மற்றும் தாமதமான பதிலளிப்பு நேரங்கள் போன்ற பல சிக்கல்களைக் கொண்டுள்ளன. ஏனெனில், அவை தொடர்ந்து நிகழாது என்ற அடிப்படையிலிருந்து பிரதானமாகத் தோன்றுவதனாலாகும். இதனால், கடன் திட்டத்தை நிரந்தரமாக நீடிக்கின்ற அடிப்படையொன்றில் தொடர்ச்சியாக இயலுமைப்படுத்தி விரும்பத்தக்கவாறு வருடாந்த ஒதுக்கீடுகளுடன் அரசாங்கத்திடம் அல்லது வேறு ஏதேனும் கொடை முகராண்மையிடமிருந்து கிரமமான நிதிய ஒதுக்கீடுகளுடன் தொடர்ச்சியான அடிப்படையொன்றில் தொழிற்படுவதற்கு கடன் திட்டம் வடிவமைக்கப்பட வேண்டும். பிலிப்பைன்ஸ் நாட்டினால் அறிமுகப்படுத்தப்படும் அனர்த்த மீட்புக் கடன் திட்டம் சிறந்ததொரு உதாரணமாகக் கொள்ளப்படுகின்றது (தயவுசெய்து கீழேயுள்ள சிறப்புக் குறிப்பைப் பார்க்கவும்).

அனர்த்த மீட்பு கடன் திட்டமொன்றை உருவாக்குவதில், பின்வரும் முக்கிய அம்சங்கள் கருத்திற்கொள்ளப்பட வேண்டும்.

- அனர்த்தத்தின் காரணமாக, பாதிக்கப்பட்ட வேளாண்மையாளர்கள், மீனவச் சமூகம் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளுக்கு உயிர்வாழ்வு உதவியையும் மீட்பு உதவியையும் வழங்குவதை கருத்திற்கொள்ள வேண்டும்.
- நிதியியல் உதவியை வழங்குவதற்கான உடனடி பதிலிறுப்புக் காலம்: அனர்த்த மீட்பு கடன் திட்டமொன்றை உருவாக்கும் போது கருத்திற்கொள்ள வேண்டிய முக்கிய பண்புகளில் ஒன்று பதிலிறுப்பு நேரமாகும்.

1 ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல் அல்லது விரிவுபடுத்தலே இத்திட்டத்தின் முக்கிய நோக்காகும். எவ்வாறாயினும், கடந்த காலத்தில் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிக்கும் இத்திட்டம் பயன்படுத்தப்பட்டது.

- உயிர்வாழ்வதற்கான அடிப்படை தேவைகளை நிறைவுசெய்வதற்கான நிதியியல் உதவியை வழங்குவதன் மூலம் பாதிக்கப்படுபவர்களிற்கு காலமுறையாக பதிலிறுப்புச் செய்தல் என்பது முக்கியமானதொன்றாகும். பாதிக்கப்படுபவர்களின் உயிர்வாழ்வு தேவைகள் உடடினயாக முகங்கொடுக்கப்படும் போது மீட்பு என்பது விரைவாகவும் நிலையானதாகவும் காணப்படல் வேண்டும்.
- பாதிக்கப்படுபவர்களுக்கு இரு மடங்கு நிதியியல் உதவி:

  (அ) மானிய உதவியை வழங்குதல்: உணவு, உறையுள் மற்றும் சுகாதாரம் போன்ற அவசர மற்றும் உடனடித் தேவைகளை பூர்த்திசெய்வதற்கான கொடையாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதியியல் உதவி வழங்கப்பட வேண்டும்.

**சிறப்புக் குறிப்பு: பிலிப்பைன்ஸ் நாட்டில் அனர்த்த மீட்புக் கடன் திட்டம்**

பிலிப்பைன்ஸ் நாட்டில், பயிர்கள், கோழி வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி ஆகிய உற்பத்திகளுடன் ஒருங்கிணைந்த இடர்நேர்வின் கடுமையையும் தன்மையையும் கருத்திற்கொண்டு, பிலிப்பைன்ஸ் நாட்டின் விவசாயத் திணைக்களம் மற்றும் வேளாண்மை கொடுகடன் கொள்கைச் சபை சிறு வேளாண்மையாளர்களுக்கும் மீனவச் சமூகத்திற்கும் ஆதரவளிப்பதற்காக இரண்டு திட்டங்களின் இணைப்பை வடிவமைத்து அறிமுகப்படுத்தியுள்ளன. உற்பத்திக் கடனை இலகுவாக அணுகல், உயிர்வாழ்வு மற்றும் மீட்பு என்பன அத்தகைய இரு திட்டங்களாகும்.

இலகுவாக கொடுகடனை அணுகுவதற்காக, கூட்டுறவுகள், கூட்டுறவு வங்கிகள், ஒருங்கிணைப்புக்கள், கிராமிய வங்கிகள் மற்றும் இலாப நோக்கமற்ற நிறுவனங்கள்/ நுண்பாக நிதி நிறுவனங்கள் போன்ற அடிமட்ட நிறுவனங்களை கடன்வழங்கல் வழிமுறைகள்/ வழிகளாக உற்பத்தி கடனை இலகுவாக அணுகல், உயரிர்வாழ்வு மற்றும் மீட்பு திட்டங்கள் பயன்படுத்துகின்றன.

உற்பத்திக் கடனை இலகுவாக அணுகல் என்பது மிகச் சிறியதும் சிறியளவானதுமான வேளாண்மை, மீனவச் சமூகங்களில் பயிர்கள், கோழி வளர்ப்பு, விலங்கு வளர்ப்பு மற்றும் மீன்பிடி ஆகிய உற்பத்திகளுக்கு நிதியிடுவதற்கான கடன் வசதியாகும். இது முதன்மையாக வங்கியல்லாத மற்றும் வங்கிப் பணிகள் குறைவாகவுள்ள பிரதேசங்கள் மீதும் அத்துடன் விவசாயத் திணைக்களத்தால் அடையாளங்காணப்பட்ட வேறு முன்னுரிமை பிரதேசங்களில் கவனஞ்செலுத்துகின்றது.

உற்பத்தி கடனை இலகுவாக அணுகல் திட்டத்தின் வேறு அம்சங்கள் பின்வருமாறு :

- ✪ வட்டி வீதம் - ஆண்டிற்கு 6 சதவீதம் / மாதத்திற்கு 0.5 சதவீதம்
- ✪ பிணை உறுதியளிக்கப்படாத கடன்
- ✪ பயிர் வகை சார்ந்த கடன் முதிர்ச்சி
- ✪ பிலிப்பைன் க்றொப் இன்சூரன்ஸ் கோர்பிரேக்ஷன் நிறுவனத்திடமிருந்து இலவசக் காப்புறுதிப் பூட்கை
- ✪ நிதியியல் எழுத்தறிவு செயற்றிட்டத்தை கடன்பாட்டாளர்கள் அறிய வேண்டும்

உயிர்வாழ்வு மற்றும் மீட்பு என்பது குறைந்தளவானதும் சிறியதுமான வேளாண்மையாளர்கள் மற்றும் மீனவச் சமூகத்தின் வேளாண்மை, மீன்பிடி வாழ்வாதார நடவடிக்கைகளை புனரமைப்பதற்கான நிதியியல் தேவைப்பாடுகளுக்கு வடிவமைக்கப்பட்ட கடன்வசதியாகும். பேரிடரால் பாதித்த பகுதிகளில் உள்ள வேளாண்மைக் குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மீண்டும் பெறுவதற்கு உதவுவதற்கான அரசாங்கத்தின் இலக்கை ஆதரித்தல் மற்றும் கடன்களூடாகவும் அவசர உதவிப் பொதிகளூடாவும் சிறு வேளாண்மையாளர்களுக்கும் மீனவச் சமூகத்திற்கும் உடனடி நிவாரணங்களை வழங்குதல் ஆகியவற்றை உயிர்வாழ்வு மற்றும் மீட்பு செயற்றிட்டம் நோக்காகக் கொண்டுள்ளது.

உயிர்வாழ்வு மற்றும் மீட்பு செயற்றிட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

- ✪ வட்டி வீதம் - ஆண்டிற்கு 0 சதவீதம்
- ✪ 3 ஆண்டுகள் வரை மீள்கொடுப்பனவு வசதி (இயலாற்றலை அடிப்படையாகக் கொண்டு)
- ✪ "பேரிடர் நிலையின் கீழ்" என்ற பிரதேசங்களில் செயற்றிட்டம் கவனஞ்செலுத்துகின்றது.
- ✪ வேளாண்மை கொடுகடன் கொள்கைச் சபை நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் கடனைப் பெற்றுள்ள தற்போதுள்ள கடன்பாட்டாளர்களுக்காக கடன் கொடுப்பனவுகள் தொடர்பில் ஒரு ஆண்டு சட்டஇசைவுத் தாமதம்.

(ஆ) கொடுகடன் ஆதரவு: அனர்த்தங்களில் இருந்து மீள்வதற்கான கடனொன்றாக நிதியியல் உதவி அத்துடன் தற்போதுள்ள கடன்களுக்கான கடன் சட்டஇசைவுத்தாமதம். இதற்கு மேலதிகமாக, முன்னதாக தீர்மானிக்கப்பட்ட சலுகைக் காலம் கடன் மீள்கொடுப்பனவுகளுக்காக வழங்கப்பட வேண்டும்.

- அனர்த்த மீட்பு கடன் திட்டமானது 0 சதவீதத்தில் அல்லது மிகவும் குறைவான வட்டி வீதத்தில் கடன்களை வழங்குவதை கருத்திற்கொள்ள வேண்டும்.
- இதற்கு மேலதிகமாக, தற்போதுள்ள கடனின் இறுதியிலுள்ள தொகையை மீண்டும் சேர்ப்பதன் மூலம் பாதிக்கப்பட்ட கடன்பாட்டாளர்களின் வேறு கடன்களுக்கு சலுகை காலம் வழங்கப்படலாம்.

## 7. முடிவுரை

தீவிர வானிலை நிலைமையால் மிகவும் பாதிக்கப்படையக்கூடிய நாடாக இலங்கை கருதப்படுவதுடன் 2017இல் அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகளில் இரண்டாவது இடத்தில் காணப்பட்டது. மேலும், அத்தகைய காலநிலை அதிர்வுகளின் பொருளாதாரத் தாக்கம் அதிகரிக்கின்ற அதேவேளை தற்போதைய நகரமயமாக்கல் செயன்முறை இத்தகைய பாதகமான வானிலை நிலைமைகளினால் பாதிக்கப்படும் மக்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கும். நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் தமது வழமையான வியாபார நடவடிக்கைகளை மீள இயக்குவதற்கு அவர்களுக்கு வெளிவாரி ஆதரவு தேவை என்பதை சமந்த (2018) எடுத்துரைக்கின்றார். ஆகையால் அரசாங்கம் இச்செயன்முறையில் முன்முயற்சியாளராக இயங்குதல் வேண்டும். இப்பின்னணியில், சூழலைப் பாதுகாப்பதற்கு அதிகளவான யதார்த்தமான வழிமுறைகள் மூலம் ஆதரவளிக்கப்படும் அனர்த்த மீட்பு கடன் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் இத்தகைய பாதகமான சூழ்நிலைகளிலிருந்து ஒப்பீட்டளவில் விரைவான வேகத்தில் மீளக்கூடிய அதிகம் தாக்குப்பிடிக்கக்கூடிய வேளாண்மையாளர்கள், மீனவச் சமூகங்கள் மற்றும் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகளை உருவாக்குவதன் மூலம் காலநிலை அதிர்வுகளிற்கெதிராக தொடர்ந்தும் போரடுகின்ற அதேவேளை பொருளாதாரத்தினதும் மக்களினதும் இழப்புக்களைத் தணிப்பதற்கான முறையான முன்கூட்டிய எச்சரிக்கை முறைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

## உசாத்துணைகள்


Central Bank of Sri Lanka. (2022, April). *Annual Report 2021*.

Disaster Risk Management Overview. (2022, May 2). The World Bank. Retrieved June 20, 2022, from https://www.worldbank.org/en/topic/disasterriskmanagement/overview

Hallegatte, S., Bangalore, M., Bonzanigo, L., Fay, M., Kane, T., Narloch, U., Rozenberg, J., Treguer, D., & Vogt-Schilb, A. (2016). *SHOCK WAVES Managing the Impacts of Climate Change on Poverty*.

Ministry of Disaster Management. National Disaster Relief Services Center (NDRSC), Disaster Situation Reports 2016 - 2020

Presentation by Secretary, Department of Agriculture Government of Philippines at APRACA-JFC Policy Forum and 71st EXCOM of APRACA on 6-7 June 2019, Japan.

Samantha, G. (2018). The Impact of Natural Disasters on Micro, Small and Medium Enterprises (MSMEs): A Case Study on 2016 Flood Event in Western Sri Lanka. *Procedia Engineering*, *212*, 744–751. https://doi.org/10.1016/j.proeng.2018.01.096

The World Bank. (2014). *Lessons Learned from the Sri Lanka's Tsunami Reconstruction*.

The World Bank. (2017). *SRI LANKA DEVELOPMENT UPDATE Creating opportunities and managing risks for sustained growth*. http://www.copyright.com/.

The World Bank. (2019). *Sri Lanka Strengthens Its Climate Resilience*.

Thomas, V., & LLpez, R. (2015). Global Increase in Climate-Related Disasters. SSRN Electronic Journal. https://doi.org/10.2139/ssrn.2709331

United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA). (2019). *Global Humanitarian Overview 2019*.

United Nations Office for the Coordination of Humanitarian Affairs (OCHA). (2022). *Global Humanitarian Overview 2022*.

World Meteorological Organization. (2021a). *The Atlas of Mortality and Economic Losses from Weather, Climate and Water Extremes (1970–2019)*.

World Meteorological Organization. (2021b, August 31). *Weather-related disasters increase over past 50 years, causing more damage but fewer deaths*.

# நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உந்துசக்தி: உலகளாவிய பின்னணியில் இலங்கையை நிலைப்படுத்தல்

எஸ் டி நிலங்கா சமிந்தனி
மூத்த உதவிப் பணிப்பாளர்
பிரதேச அபிவிருத்தித் திணைக்களம்

*இரண்டாம் உலகப் போரினால் உயிர்களுக்கும் வாழ்வாதாரங்களுக்கும் ஏற்பட்ட பேரழிவானது அரசாங்கங்கள் தமது கொள்கை குறிக்கோள்கள் தொடர்பில் மீள்பரிசீலனை செய்வதற்கு ஏதுவாக அமைந்ததுடன் இங்கு பொருளாதாரத்தினதும் நிதியியலினதும் அபிவிருத்திக்கான நாட்டம் 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முக்கிய அம்சமாக தோற்றம்பெற்றது. இன்றும் கூட உலகளாவிய ரீதியில் கொள்கை வகுப்பாளர்களின் நிகழ்ச்சிநிரல்களில் இதுவே தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்திவருகின்றது. உலக அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் ஒருங்கிணைந்த பாகமொன்றாக நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஏற்றுக்கொண்டதுடன், நிதியியல் உறுதிப்பாட்டினதும் நிதியியல் ஒருமைப்பாட்டினதும் ஏனைய தனித்துவமான கொள்கை குறிக்கோள்களுக்கு மத்தியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கான கொள்கைகளை எவ்வாறு சிறந்த முறையில் பின்பற்றுவது என்பது தொடர்பில் நிதியியல் ஒழுங்குபடுத்துநர்களும் மேற்பார்வையாளர்களும் தற்போது சவால்களை எதிர்கொண்டு வருகின்றனர். இனிவரும் சந்ததியினருக்கு நன்மையபக்கும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் மூலம் நாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தலைப் பரப்புவதற்கான இலங்கையின் முறைமை சார்ந்த அணுகுமுறை/உந்துசக்தி தொடர்பாக கலந்துரையாடுவதே இக்கட்டுரையின் குறிக்கோளாகும்.*

## நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உலகளாவிய உந்துசக்தி

நிதியியல் பணிகளுக்கு அணுகலை அதிகரிப்பதற்கான உந்துசக்தியானது 1970களின் நடுப்பகுதியில் வங்காளதேசம் மற்றும் இலத்தீன் அமெரிக்காவின் சில பாகங்களில் முறையான கடன் வசதிகள் பொதுவாகக் கிடைக்கப்பெறாத வறியவர்களுக்கு கடன்களை வழங்கிய நுண்பாகக் கடன் முன்னெடுப்புக்களிலேயே அதன் தொடக்கத்தைக் பெற்றுக்கொண்டது. அதனைத் தொடர்ந்து பல்வேறு குறைந்த, நடுத்தர மற்றும் உயர்ந்தளவான வருமானத்தை ஈட்டுகின்ற நாடுகளும் கூட இதைப்போன்ற முன்னெடுப்புகளைப் பின்பற்றியதன் மூலமாக இம்முன்னெடுப்புகள் பிரபல்யமடைந்தன. எனினும், குறிப்பாக பெண்களை வலுப்படுத்தவதில் நுண்பாக நிதியம் சில சாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தபோதிலும், முக்கியமாக உயர்வான வட்டி வீதங்கள் மற்றும் நிதியியல் முறைகேடுகள் என்பன காரணமாக வறுமை ஒழித்தல் மீதான அதன் தாக்கம் குறைவாகவேவுள்ளதுடன் இதன் மூலமாக அதிகளவிலான கடன் சுமைகள் ஏற்பட்டன. 2000ஆம் ஆண்டுகளின் முற்பகுதியிலிருந்து, ஒட்டுமொத்த நிதியியல் முறைமைகளில் அடிப்படை மாற்றங்களுக்கான தேவை அங்கீகரிக்கப்பட்டபோதிலும், உத்தேசிக்கப்பட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதில் காணப்படுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்துடன், கொடுகடனுக்கான அணுகலை மேம்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

"நிதியியல் வசதிக்குட்படுத்தல்" என்பது நிதியியல் பணிகளைப் பரவச் செய்கின்ற பரந்தளவிலான அபிவிருத்தி விளைவுகளை உருவாக்குவதற்கும் வறுமையை ஒழிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்ற ஒப்பீட்டளவில் புதியதொரு எண்ணக்கருவாகும். ஒட்டுமொத்தமாக, நிதியியல் வசதிக்குட்படுத்தலானது நிதியியல் பணிகளுடன் தொடர்பற்ற மக்களை முறையான நிதியியல் முறைமைகளில் ஒருங்கிணைப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இது சேமித்தல், கொடுப்பனவுகள் அத்துடன் கொடுகடன் மற்றும் காப்புறுதிக்கான மாற்றல்கள் உள்ளடங்கலாக நிதியியல் பணிகளை எளிதாக அணுகுவதற்கு அவர்களுக்கான வாய்ப்பை வழங்குகிறது.[1] இரண்டரை தசாப்த காலங்களுக்கு

---

1 ஏ. ஹன்னிக் மற்றும் எஸ். ஜான்சன், நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாடு: தற்போதைய கொள்கை சிக்கல்கள் ஆசிய அபிவிருத்தி வங்கிச் செயலாற்றுக் கட்டுரைத் தொடர்கள் (2010).

மேலாக, வறுமை ஒழிப்பு, வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைத்தல் மற்றும் நிதியியல் உறுதிப்பாட்டுடன் இணைந்து, நிலைபெறத்தக்கதும் வசதிக்குட்படுத்துகின்றதுமான வளர்ச்சியிலும் சான்று அடிப்படையிலான பங்களிப்பின் மூலமாக ஈர்க்கப்பட்டு, நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பிற்கான பன்னாட்டுக் கொள்கை ஒருங்கிணைப்பானது குறிப்பிடத்தக்க உச்சத்தை எட்டியது. அதற்கமைய, நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு ஆதரவு வழங்குவதற்கான முக்கிய நடவடிக்கையை முன்னணி பன்னாட்டு நிறுவனங்கள் மேற்கொண்டதுடன் பிரதான மைல்கற்கள் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளன.

- ❖ நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்காக அபிவிருத்தியடைந்து வருகின்ற மற்றும் வளர்ந்து வருகின்ற பொருளாதாரங்களில் வசதிக்குட்படுத்துகின்ற நிதியியல் கொள்கைகளை பின்பற்றுவதை ஊக்குவிப்பதற்காக மையப் பணியுடன் உறுப்பு மத்திய வங்கிகளுக்கும் நிதியியல் ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்களுக்கும் சொந்தமான அவற்றினால் வழிநடத்தப்படும் கொள்கைத் தலைமைக் கூட்டமைப்பாக 2008ஆம் ஆண்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பின் ஆரம்பித்தல்.
- ❖ ஜி20 தலைவர்கள், உலகளாவிய அபிவிருத்தி நிகழ்ச்சிநிரலின் முக்கிய தூண்களில் ஒன்றாக நிதியியல் வசதிக்குட்படுத்தலை அங்கீகரித்து 2010இல் ஜி20 உச்சிமாநாட்டில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் நடவடிக்கைத் திட்டத்திற்கும் புத்தாக்க நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கோட்பாடுகளுக்கும் அனுமதியளித்தனர். அதனைத் தொடர்ந்து, நிதியியல் வசதிக்குட்படுத்தல் நடவடிக்கைத் திட்டத்தின் முக்கிய ஒருங்கிணைத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் பொறிமுறையாக நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உலகளாவிய கூட்டாண்மை 2010 திசெம்பரில் தொடங்கப்பட்டதுடன் இது நிதியியல் வசதிக்குட்படுத்தல் முயற்சிகள் தொடர்பான சக கற்றல் முறை, அறிவுப் பகிர்வு, கொள்கை ஆதரவு மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றிற்கான ஜி20 நாடுகள் மற்றும் ஜி20 அங்கத்துவமற்ற நாடுகளுக்கான வசதிக்குட்படுத்துகின்ற தளமொன்றாக செயலாற்றுகின்றது.
- ❖ அபிவிருத்தியடைந்து வருவதும் வளர்ந்து வருவதுமான பொருளாதாரங்களின் மூலம் நிதியியல் வசதிக்குட்படுத்தல் கடப்பாடுகளின் முதலாவது உலகளாவிய, அளவிடக்கூடிய தொகுப்பாக 2011இல் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பின் உறுப்பினர்களால் மாயா பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உறுதியான இலக்குகளை அமைப்பதற்கும் உள்நாட்டில் கொள்கை மாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் முன்னேற்ற இற்றைப்படுத்தல்களை பகிர்வதற்குமாக நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உறுப்பு நிறுவனங்களை ஊக்குவிப்பது இதன் முக்கிய குறிக்கோளாக காணப்பட்டது.
- ❖ 2015ஆம் அண்டில், உலக வங்கிக் குழுமம் 2020ஆம் ஆண்டளவில் உலகளாவிய நிதியியல் வசதிக்குட்படுத்தலை அணுகுவதை அடையும் உலகளாவிய இலக்கொன்றை அறிவித்தது. அதற்கமைய, அந்நேரத்தில் முறையான நிதியியல் முறைமையிலிருந்து விடுபட்டிருந்த வயதுவந்தவர்கள் (15+) 2020ஆம் ஆண்டளவில் நிதியியல் நிறுவனத்தில் கொடுக்கல்வாங்கல் கணக்கை வைத்திருப்பதற்கும் பணத்தைச் சேமிப்பதற்கும் பணத்தை அனுப்புவதற்கும் பெறுவதற்கும் மற்றும் அவர்களின் நிதியியல் தேவைகளை முகாமைசெய்வதற்கும் இயலுமாகவிருப்பர் என எதிர்பார்க்கப்பட்டது.
- ❖ 2015 செத்தெம்பரில், 17 நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கிய நிலைபெறத்தக்க அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சிநிரலை ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை ஏற்றுக்கொண்டது. இங்கு 17 நிலைபெறத்தக்க அபிவிருத்தி இலக்குகளில் 7 இலக்குகளுக்கான செயல்படுத்துநராக நிதியியல் வசதிக்குட்படுத்தல் இனங்காணப்பட்டிருந்தது.
- ❖ 2018இல், ஆசிய - பசுபிக் பொருளாதார கூட்டமைப்பு, நிதியியல் வசதிக்குட்படுத்தலுடன் தொடர்புடைய பிரச்சனைகளை ஆராய்வதற்கான தனியொரு அமைப்பை உருவாக்கியது. தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு, சமத்துவமான பொருளாதார மேம்பாட்டிற்கான அதன் கட்டமைப்பின் கீழ் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதை ஒரு முக்கிய குறிக்கோளாக உள்ளடக்கியுள்ளது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கியானது ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளின் நுண்பாகக் கடன் செயற்றிட்டங்களுக்கு முனைப்புடன் ஆதரவளிக்கின்றது.

இத்தகைய உலகளாவிய தலையீடுகளும் செல்வாக்குகளும் வசதிக்குட்படுத்துகின்ற மற்றும் நிலைபெறத்தக்க வளர்ச்சியை அடைவதற்கான அவர்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி மூலோபாயங்களின் முக்கிய பாகமாக நிதியியல் வசதிக்குட்படுத்தலை அங்கீகரிப்பதற்கு பல்வேறு அபிவிருத்தியடைந்து வரும் பொருளாதாரங்களை ஊக்குவித்தன.

### "நிதியியல் வசதிக்குட்படுத்தல்" வரைவிலக்கணமும் அதன் பரிமாணங்களும்

நிதியியல் வசதிக்குட்படுத்தல் பற்றிய வரைவிலக்கணமானது பல ஆண்டு காலமாக பரிணாம வளர்ச்சி பெற்றதுடன்

மேலும் இது பல்வேறுபட்ட அமைப்புகளினாலும் எழுத்தாக்கங்களில் பல வழிகளிலும் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது. அதன் பல்பரிமாண தன்மை காரணமாக, அதை வரைவிலக்கணம் செய்வதும் அளவிடுவதும் எளிதானதல்ல. ஆகவே, இதற்கென பொதுவான அல்லது தனியான வரைவிலக்கணம் காணப்படவில்லை. எனினும், நிதியியல் வசதிக்குட்படுத்தலை வரைவிலக்கணம் செய்வதில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய கூறுகள் குறித்து பன்னாட்டு நிறுவனங்களிடையே ஒருமித்த கருத்துள்ளது என்பதுடன் அவற்றின் வரைவிலக்கணங்கள் வழிகாட்டுதலாக பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வரைவிலக்கணங்கள் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் பல்பரிமாணத் தன்மையை எடுத்துரைப்பது மட்டுமன்றி நிதியியல் சாதனங்களினதும் பணிகளினதும் நிரம்பல் மற்றும் கேள்வி ஆகிய இரு பக்கங்களினதும் நோக்குகளையும் உள்ளடக்குகின்றன.

“கொடுக்கல்வாங்கல்கள், கொடுப்பனவுகள், சேமிப்புக்கள், கொடுகடன் மற்றும் காப்புறுதி போன்றன பொறுப்புவாய்ந்த மற்றும் நிலைபெறத்தக்க வகையில் வழங்கப்படுவதை பெற்றுக்கொள்கின்ற பயனுள்ள மற்றும் வசதியான நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்கள் கொண்டிருத்தல்” என உலக வங்கி நிதியியல் வசதிக்குட்படுத்தலை வரைவிலக்கணம் செய்கிறது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கருத்திற்கமைவாக, அது “வீட்டுத்துறையினருக்கும் நிறுவனங்களுக்கும் நியாயமான செலவுடைய நிதியியல் பணிகளுக்கான உடனடி அணுகலை” வழங்குவதாகும். “தற்போது நிதியியல் முறைமையிலிருந்து விடுபட்டவர்கள் உள்ளடங்கலாக அனைத்துத் தொழில்புரிகின்ற வயதுவந்தவர்களும் கொடுகடன், சேமிப்புக்கள் (நடைமுறைக் கணக்குகளை உள்ளடக்குவதற்கு பரவலாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட), கொடுப்பனவுகள் மற்றும் காப்புறுதி போன்றன உள்ளடங்கலாக முறையான நிறுவனங்களினால் வழங்கப்படும் நிதியியல் பணிகளுக்குக் காத்திரமான வகையில் அணுகலைக் கொண்டிருக்கும் நிலை” என நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உலகளாவிய பங்குடைமை மற்றும் வறியோருக்கு உதவுவதற்கான ஆலோசனைக் குழு நிதியியல் வசதிக்குட்படுத்தலை வரைவிலக்கணம் செய்கின்றது.

நிதியியல் வசதிக்குட்படுத்தலின் அளவு “அணுகல்” என்ற பரிமாணத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது, பொருளாதாரமொன்றில் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அமைப்பு முறையைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துவதற்கு நிதியியல் பணிகளின் “பயன்பாடு” மற்றும் “தரம்” போன்ற பரிமாணங்களையும் கருத்திற்கொள்கிறது. காலப்போக்கில் நிதியியல் சாதனத்தின்/ பணியின் பயன்பாடு நிகழ்த்தன்மை மற்றும் காலம் போன்ற குறிகாட்டிகள் மூலமாக, நுகர்வோர் எவ்வாறு நிதியியல் பணிகளைப் பயன்படுத்துகின்றனர் என்பதை பயன்பாடு என்ற பரிமாணம் விபரிக்கின்றது. தரப் பரிமாணம், நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகள் என்பன வாடிக்கையாளர் தேவைகளை எவ்வளவு தூரம் நிறைவேற்ற முடியுமென்பதனை எடுத்துக்காட்டுகின்ற அவற்றின் பண்புகளிலேயே அடிப்படையில் கவனம் செலுத்துகின்றது. வாடிக்கையாளர்கள் நிதியியல் சாதனங்களையும் பணிகளையும் நம்பிக்கையுடன் சரியாக புரிந்துகொள்வார்களாயின், நிதியியல் சாதனங்களினதும் பணிகளினதும் உயர்ந்தபட்ச நன்மையை அடைந்துகொள்ள முடியும் என்பதால், நிதியியல் கல்வி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவை தரப் பரிமாணத்தை மேம்படுத்துவதற்கான முக்கிய ஊக்கிகளாக இனங்காணப்பட்டுள்ளன. மேற்குறித்த முக்கிய பரிமாணங்களுக்கு மேலதிகமாக, நிதியியல் சாதனம் அல்லது பணி வாடிக்கையாளர்களின் வாழ்வின் மீது கொண்டிருந்த சாதகமான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கத்தினைக் கருத்திற்கொண்டு “நல்வாழ்வு” நான்காவது பரிமாணமாக நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பினால் முன்மொழியப்பட்டது.

நியம வரைவிலக்கணங்கள் பொதுவாக நிதியியல் வசதிக்குட்படுத்தலின் அனைத்து இந்நோக்குகளையும் இணைத்து, நிதியியல் சாதனங்களும் பணிகளும் மக்களுக்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் நன்மையடைகின்றன என்பதை உறுதிசெய்வதற்கு பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட வேண்டும் என்பதையே எடுத்துரைக்கின்றது. தனியொரு அல்லது உலகளாவிய வரைவிலக்கணம் காணப்படவில்லை என்றபோதிலும், பன்னாட்டு நிறுவனங்கள் அதன் உறுப்பினர்களுக்கு அவர்களின் நாட்டின் குறிப்பிட்ட நிலைமைகளுக்கு ஏற்ப தமது சுய வரைவிலக்கணங்களை உருவாக்குவதற்கு வழிகாட்டுதல்களை வழங்குகின்றன. பல நாடுகள் தேசிய அளவில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஆதரிப்பதிலும் ஊக்குவிப்பதிலும் தமது சொந்த நாட்டுக்குரித்தான வரைவிலக்கணங்களை உருவாக்கிப் பயன்படுத்தியுள்ளன. நாடு மட்டத்திலான வரைவிலக்கணங்களுக்கிடையேயுள்ள வேறுபாடுகள் அதன் நிதியியல் துறையின் குறிப்பிட்ட பண்புகளையும் அதன் நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பான நிலைமைகளையும் பிரதிபலிப்பதற்கு முனைகின்றன. மிக முக்கியமாக, அத்தகைய அதிகாரப்பூர்வ தேசிய வரைவிலக்கணமானது பகிரப்பட்ட தூரநோக்கிற்கான அடிப்படையொன்றாக செயல்படுகின்றதுடன் இலக்குகளை நிர்ணயிப்பதில் ஆதரவளித்து இலக்குகளை அடைவதற்கான கட்டமைப்பை திட்டமிடுகின்றது.

நிதியியல் வசதிக்குட்படுத்தல் என்பது “இலங்கையிலுள்ள அனைத்து தனிநபர்களும் நிறுவனங்களும் தமது தேவைகளையும் விருப்பங்களையும் அடிப்படையாகக்

கொண்டு உயர்தரத்திலான, பொருத்தமான, பாதுகாப்பான அத்துடன் வசதியான நிதியியல் பணிகளை அணுகி அவர்களின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஆதரவளித்து தரமான வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான வினைத்திறன்மிக்க மற்றும் காத்திரமான வகையில் இப்பணிகளைப் பயன்படுத்துகின்ற நிலை" என இலங்கையில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளது.[2]

இலங்கையின் வரைவிலக்கணமானது நிதியியல் வசதிக்குட்படுத்தலின் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பரிமாணங்களையும் உள்ளடக்கியுள்ள அதேவேளை, நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பினால் முன்மொழியப்பட்டவாறு, நல்வாழ்வின் நான்காவது பரிமாணத்துடன் இசைந்துசெல்லும் வகையில், சாதகமான பொருளாதார மற்றும் சமூகத் தாக்கங்களுக்கு வழிவகுக்கின்ற அணுகல், பயன்பாடு மற்றும் தரம் ஆகிய அம்சங்கள் நுகர்வோர் தேவைகளையும் தகவலறிந்த தெரிவுகளையும் அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது.

### நிதியியல் வசதிக்குட்படுத்தலை அளவிடுதல்

வசதிக்குட்படுத்துகின்ற பொருளாதார அபிவிருத்தியின் இலக்கை அடைவதில், முக்கிய செயற்பாட்டுக் கூறொன்றாக நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கு மிகுந்த அங்கீகாரம் கிடைத்துள்ள நிலையில், நிதியியல் வசதிக்குட்படுத்தல் கொள்கைகள் மற்றும் முன்னெடுப்புகள் தொடர்பில் நாடுகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. அதேவேளை, இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் முன்னேற்றத்தை கண்காணித்தலின் மூலம் தேசிய கொள்கைகளின் பயனுள்ள வடிவமைப்பையும் அவற்றை நடைமுறைப்படுத்துவதையும் உறுதிப்படுத்தும் பொருட்டு நம்பகமான தரவுகள் மற்றும் பொதுவான குறிகாட்டிகளை கொண்டிருப்பதன் முக்கியத்துவம் அங்கீகரிக்கப்பட்டது. முன்னணி பன்னாட்டு நிறுவனங்கள் பன்னாட்டு அளவில் தரவுகளின் தரத்தையும் அளவையும் மேம்படுத்தத் தொடங்கின. அதன் பின்னர், நிதியியல் வசதிக்குட்படுத்தல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான தமது இயலளவினை வலுப்படுத்த உறுப்பு மற்றும் உறுப்பல்லாத நாடுகளுக்கு ஆதரவளிக்கத் தொடங்கின.

நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உலகளாவிய கூட்டாண்மையானது அடிப்படை நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிகாட்டிகளின் தொகுதியை உருவாக்கியதுடன் இது 2012இல் ஜி20 தலைவர்களால் அங்கீகரிக்கப்பட்டது. இக்குறிகாட்டிகள், பின்னர் நிதியியல் அறிவையும் நிதியியல் பணிகளின் பயன் மற்றும் தரத்தையும் உள்ளடக்குவதற்கும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் அமைப்பு முறையை ஆழமாக அறிந்துகொள்வதற்கும் 2013இல் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான உலகளாவிய கூட்டாண்மை அமைப்பினால் விரிவாக்கப்பட்டன. 2016இல் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் பயன்பாட்டையும் டிஜிட்டல் உட்கட்டமைப்பிற்கான அணுகலையும் அளவிடுவதற்கு மீண்டும் சில புதிய குறிகாட்டிகள் அங்கீகரிக்கப்பட்டன. தற்போதுள்ள ஜி20 குறிகாட்டிகளானவை அணுகல், பயன்பாடு மற்றும் உற்பத்திகளின் தரம் மற்றும் பணி வழங்கல் ஆகிய மூன்று முக்கிய பரிமாணங்களை உள்ளடக்கிய நிதியியல் வசதிக்குட்படுத்தலை அளவிடுவதை நோக்காகக் கொண்டுள்ளன.

பன்னாட்டு அரங்கில், உலக வங்கி குளோபல் பின்டெக்ஸ், பன்னாட்டு நாணய நிதியம், நிதியியல் அணுகல் அளவீடு,

**வரைபடம் 1: ஜி20 நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிகாட்டிகள்**

**முக்கிய குறிகாட்டிகள்**

| | | |
|---|---|---|
| கணக்கு (% வயது 15+ ) (உலகளாவிய பின்டெக் தரவுத்தளம், 2017) — 69% | கணக்கு (% பெண்கள், வயது 15+) (உலகளாவிய பின்டெக் தரவுத்தளம், 2017) — 65% | மேற்கொள்ளப்பட்ட அல்லது கிடைக்கப்பெற்ற டிஜிட்டல் கொடுப்பனவுகள் (% வயது 15+) (உலகளாவிய பின்டெக் தரவுத்தளம், 2017) — 52% |
| கணக்கிற்கு நேரடியாக கிடைக்கப்பெற்ற சம்பளங்கள் அல்லது அரசாங்க மாற்றல் கொடுப்பனவுகள் (உலகளாவிய பின்டெக் தரவுத்தளம், 2017) — 30% | பதிவுசெய்யப்பட்ட செல்லிட முகவர் நிலையங்களின் எண்ணிக்கை (ஒவ்வொரு 100,000 நபர்கள்) (ப.நா.நி எப்ஏஎஸ், 2018) — 30% | முறையான நிதியியல் நிறுவனமொன்றில் கணக்கொன்றை வைத்திருக்கின்ற சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் (%) (தொழில்முயற்சிகளின் அளவீடுகள்) — 87% |

மூலம்: https://datatopics.worldbank.org/g20fidata/

2 இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்

கலப் வேல்ட் கருத்துக்கணிப்பு, பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பு தேசிய நிதியியல் அறிவு மற்றும் வசதிக்குட்படுத்தல் அளவீடுகள், பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒழுங்கமைப்பு சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சி தகவல் தளம் மற்றும் உலக வங்கி உலகளாவிய கொடுப்பனவுகள் முறைமைகளின் அளவீடு போன்றன ஜி20 நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிகாட்டிகளுக்கேற்ப தரவை வழங்குகின்றன.

பன்னாட்டு நாணய நிதியமானது பல்வேறு நிதியியல் சாதனங்களுக்கான நிதியியல் உட்கட்டமைப்பு, வேறுபட்ட விநியோக வழிகள் மீது கவனம் செலுத்தி நிதியியல் அணுகல் மட்டத்தை அளவிடுவதனை வசதிப்படுத்துகின்ற வழங்கல்பக்கத் தரவுகளின் அடிப்படையில் சேகரிக்கின்றது. இதற்கு மாறாக, நிதியியல் சேமிப்பு, கொடுகடன், காப்புறுதி அல்லது கொடுப்பனவு முறைமை சாதனம், அவற்றின் பயன்பாடு நிகழும்தன்மை காலப்போக்கில், பயன்பாட்டு கால இடைவெளி மற்றும் கால அளவு ஆகியவற்றில் குறைந்தபட்சம் ஒரு வகையைக் கொண்டுள்ள தனிப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு கேள்விப் பக்கத்திலிருந்து பயன்பாடு பற்றிய தகவல்களை உலக வங்கி சேகரிக்கிறது. மேலும், பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி ஆகியவை நாடுகள் மற்றும் பல்வேறு பிராந்தியங்களுக்கு இடையேயான ஒப்பீடுகளை செயற்படுத்தும் வகையில் பல்வேறு நாடுகளில் அளவீடுகளை ஒழுங்கமைத்து நடாத்தி வருகின்றன.

நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பு (2011), நிதியியல் சாதனங்களின் அணுகல் மற்றும் பயன்பாட்டு பரிமாணங்களை அளவிடுவதற்கான நியம குறிகாட்டிகளை முன்மொழிந்துள்ளதுடன் அணுகல் மற்றும் பயன்பாட்டின் தரத்தை அளவிடுவதற்கான தொடர்பு நியமக் கட்டமைப்பின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளது. நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பு தரவு நுழைவாயில் என்பது 2016இல் தொடங்கப்பட்டதும் கொள்கை வகுப்பாளர்களால் உருவாக்கப்பட்டதுமான நிதியியல் வசதிக்குட்படுத்தல் கொள்கைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் விளைவுகளின் ஒருங்கிணைந்த உலகளாவிய தரவுத்தளமாகும். நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பு தரவு நுழைவாயிலானது நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பின் வலையமைப்பிலுள்ள 60 நாடுகளுக்கு மேல் நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பான தரவைப் பேணி முகாமை செய்கிறது. பயனர்கள் காலப்போக்கில் தமது நாட்டின் முன்னேற்றத்தைக் காணலாம் என்பதுடன் முழு வலையமைப்பிலுள்ள சக நாடுகளுடன் தமது நிலைகளை ஒப்பிடலாம். நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பு தரவு நுழைவாயில் என்பது கொள்கைகளை செயற்படுத்துவதில் முன்னேற்றத்தை தரப்படுத்துவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் பயனுள்ள மற்றும் வினைத்திறன்மிக்க கருவியாகும்.

மேலேயுள்ள பன்னாட்டு குறிகாட்டிகளின் நோக்கெல்லையானது ஒரு முழுமையான மதிப்பீட்டை வழங்குவதற்கு போதுமானதாக இருந்தபோதிலும், நாட்டிற்கு குறிப்பிட்ட தொடர்புடைய பகுதிகளில் தமது சுய மற்றும் புதிய தரவுகளை சேகரித்துத் தொகுப்பதற்கு நாடுகளை இது தேவைப்படுத்துகின்றது. கொள்கை இலக்குகளை நிர்ணயிப்பதற்கும், காலப்போக்கில் கொள்கை முன்னெடுப்புகளின் தாக்கத்தைக் கண்காணிப்பதற்கும் அடிப்படைத் தகவலாகச் செயற்படுவதால், நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கான கொள்கைகளை வடிவமைப்பதில் நாடு மட்டத்திலான இத்தகைய தரவு மற்றும் கண்டறியும் மதிப்பீடுகள் மிக முக்கியமானவையாக காணப்படுகின்றன. தற்போதைய நிதியியல் வசதிக்குட்படுத்தல் நிலையைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துவதில் தரவுகள் அடிப்படை வகிபாகத்தினைக் கொண்டுள்ளன. தேசியளவில், சான்று அடிப்படையிலான ஒழுங்குமுறைக் கட்டமைப்பை வடிவமைப்பதற்கான போக்குகள் மற்றும் இடர்நேர்வுகளை இனங்காண்பதற்கு, நம்பகமான தரவுகள் ஒழுங்குமுறைப்படுத்துநர்களினால் பயன்படுத்தப்படலாம். கொள்கை வகுப்பாளர்களைப் பொறுத்தவரையில், நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கான இடைவெளிகளைக் கண்டறியவும் புதிய கொள்கை இலக்குகளை நிர்ணயிப்பதற்கும் அல்லது கொள்கைகளை மாற்றவும் மாற்றங்களைக் கண்காணிக்கவும் அத்தகைய கொள்கைகளின் தாக்கத்தை அளவிடவும் தரவுகள் பயன்படுத்தப்படலாம். சந்தை வாய்ப்புகளை நன்கு அறிந்துகொள்ளவும், நுகர்வோர் தேவையை நிறைவேற்றுவதற்கு புதிய சாதனங்கள் மற்றும் பணிகளை உருவாக்கவும் நிதியியல் நிறுவனங்கள் அவற்றைப் பயன்படுத்தலாம்.

வழிகாட்டல் விதிகளைப் பின்பற்றி, நிதியியல் வசதிக்குட்படுத்தலின் பொதுவான அமைப்பு முறையை அறிந்துகொள்ளும் நோக்கத்துடன் நிதியியல் வசதிக்குட்படுத்தலை மேம்படுத்துவதற்கான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைப்பதற்காக, இலங்கை அதன் முதலாவது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் அளவீட்டை 2018இல் நடத்தியது. சேமிப்பு, கடன் பெறுகைகள், டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள் மற்றும் வேறு சில அம்சங்கள், அதாவது முதலீடுகள், காப்புறுதி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவற்றில் இவ்வளவீடு கவனம் செலுத்தியதுடன் பொதுமக்களிடையே நிதியியல் பணிகளுக்கான அணுகல், பயன்பாடு மற்றும் அறிதல் ஆகியவற்றின் பரிமாணங்களை அளவிட்டது[3]. இவ்வளவீட்டில் கண்டறியப்பட்டவை, கொள்கைகளை உருவாக்குவதற்கும்,

முன்னோக்கிப் பயணிக்கும் மூலோபாயக் கட்டமைப்பில் இலக்குகளை அமைப்பதற்கும் அடிப்படைத் தகவலாகப் பயன்படுத்தப்பட்டன.

**இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்**

"நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்" என்பது நிதியியல் வசதிக்குட்படுத்தல் தன்மையினை மேம்படுத்துவதை நோக்கி பொதுவானதொரு பாதையில் முன்னோக்கி நகர்வதற்கு அனைத்து ஆர்வலர்களும் இணங்கிய நீண்ட கால, அனைத்தையுமுள்ளடக்கிய, தரப்படுத்தப்பட்ட மற்றும் நன்கு ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறையை வழங்குவதற்கு, தேசிய மட்டத்தில் வரைவிலக்கணம் செய்யப்பட்ட நடவடிக்கைகளின் வழிகாட்டுதலொன்றாக பரந்தளவில் வரைவிலக்கணப்படுத்தலாம். உலகெங்கிலுமுள்ள 55இற்கும் மேற்பட்ட நாடுகள் 2020ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயங்களை தொடங்கியுள்ளன, மேலும் ஏறத்தாழ 34 நாடுகள் தற்போது நிதியியல் வசதிக்குட்படுத்தல் கடப்பாடுகளை அடைவதற்கான மூலோபாயங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.[4] இந்நாடுகளில் பல, தமது நாடுகளின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயங்களை உருவாக்குவதற்கும் செயற்படுத்துவதற்கும் வழிகாட்டியாக பன்னாட்டு நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட நிதியியல்

**வரைபடம் 2: தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் விரும்பப்பட்ட விளைவுகள்**

**டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள்**

அதிகரித்த டிஜிட்டல் நிதி அதிகரிப்பு மற்றும் வழங்கல் மற்றும் கேள்வி இரு தரப்பிலிருந்தும் கொடுப்பனவை மேற்கோள்ளல் ஆகியவற்றுடன் பல்வேறு வகையான பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட்ட, தரமான டிஜிட்டல் நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் கிடைக்குந்தன்மை, அணுகல் மற்றும் பயன்பாடு ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காக, நாட்டில் நன்கு நிறுவப்பட்ட டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள் முறைமையைக் கொண்டிருத்தல்.

**நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் நிதி**

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் தமது எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமானதும் வசதியானதுமான நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளை அணுகுவதில் அவர்கள் எதிர்கொள்ளும் தடைகளை இல்லாதொழித்தல்.

**நுகர்வோர் பாதுகாப்பு**

நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பைப் பாதுகாப்பதற்கான நன்கு வடிவமைக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புக்கள் மற்றும் வழிமுறைகள்

**நிதியியல் அறிவும் இயலளவு விருத்தியும்**

தனிப்பட்டவர்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளிடையே காணப்படும் உயர்ந்த மட்டத்திலான நிதியியல் அறிவானது நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் பயன்பாட்டையும் வளர்ச்சியையும் அதிகரித்து அவர்களை நிதியியல் வசதிக்குட்படுத்தலின் நன்மைகளை அடையச் செய்கின்றது.

**தரவு:** சான்று அடிப்படையிலான கொள்கைகளை உருவாக்குவதற்கும் நிதியியல் வசதிக்குட்படுத்தல் முன்னெடுப்புகளின் செயற்றிறனைக் கண்காணித்து மதிப்பீடு செய்வதற்கும் அனைத்தையுமுள்ளடக்கியதும் உறுதியானதுமான தரவுகளின் கிடைப்பனவு.

**உட்கட்டமைப்பு:** வாடிக்கையாளர்களைக் காத்திரமான முறையில் மதிப்பீடு செய்வதற்கு நிதியியல் பணி வழங்குநர்களை இயலச்செய்கின்றதுடன் வசதியான சாதனங்களை வழங்குகின்ற குறைந்தளவான செலவினைக் கொண்ட வழிகளின் மூலமாக தொலைவிலுள்ள வாடிக்கையாளர்களை அடைவதற்கான வலுவான நிதியியல் உட்கட்டமைப்பு.

**கொள்கைக் கருவியும் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலும்:** நிதியியல் பணி வழங்குநர்கள் நெகிழ்வாகவும் புத்தாக்கமுடையவர்களாவும் இருப்பதற்கு உதவும் அதேவேளை, நுகர்வோரினதும் மற்றும் நாட்டின் ஒட்டுமொத்த நிதியியல் உறுதிப்பாட்டினதும் இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கான வலுவான கொள்கைக் கருவிகளும் சமநிலைப்படுத்தப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பும்

மூலம்: இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்

3 அளவீட்டின் முக்கிய கண்டறியப்பட்டவைகளை https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/NFIS%20Summary_%20English_2.pdf எனும் இணையத்தளத்தில் காணலாம்.

4 உலக வங்கி குழுமத்தின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமொன்றை நடைமுறைப்படுத்துவதலிருந்தான பாடங்கள்.

வசதிக்குட்படுத்தல் ஆதரவுக் கட்டமைப்புகளை அல்லது கொள்கை மாதிரிகளைப் பின்பற்றுகின்றன.

இப்பின்னணியைக் கருத்திற்கொண்டு, 2018ஆம் ஆண்டின் முற்பகுதியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான அதன் தேசியளவிலான கொள்கை கட்டமைப்பை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை ஆரம்பித்தது. உலக வங்கி குழுமத்தின் உறுப்பினரான பன்னாட்டு நிதிக் கூட்டுத்தாபனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் இலங்கைக்கான தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தை வடிவமைத்தல் மற்றும் மேம்பாடு இலங்கை மத்திய வங்கியால் பரிந்துரைக்கப்பட்ட பல்துறை ஆர்வலர்களின் முயற்சியாக காணப்பட்டது. இம்மூலோபாயம் உலக வங்கியால் அறிமுகப்படுத்தப்பட்ட நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயக் கட்டமைப்பை பின்பற்றுகிறது, இதில் ஆறு முக்கிய தொகுதிகளுள்ளன, அதாவது தரவு மற்றும் கண்டறிதல், இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள், தலைமைத்துவம் மற்றும் ஒருங்கிணைப்பு, மூலோபாய உருவாக்கம், உபாய நடைமுறைப்படுத்தல் மற்றும் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு போன்றனவாகும்.

**இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்:** 2021-2024, அதன் தொலைநோக்கை உள்ளடக்கிய “சிறந்த வாழ்க்கைக்கான சிறந்த தரமான வசதிக்குட்படுத்தல்” என்ற குறிக்கோளுடன் 2021இன் முற்பகுதியில் தொடங்கப்பட்டது. இம்மூலோபாயம் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிக்கும் நாட்டின் முதல் அனைத்தையுமுள்ளடக்கிய முயற்சியாக கருதப்படுகிறது. இலங்கையிலுள்ள அனைத்து தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் பயன்படுத்தக்கூடிய உயர்தர, பொருத்தமான, பாதுகாப்பான மற்றும் வசதியான நிதியியல் சாதனங்கள் மற்றும் பணிகளின் வரையறைக்கு நன்கு தெரிந்த, நியாயமான மற்றும் சமமான அணுகலை உறுதி செய்வதை இது நோக்காகக் கொண்டுள்ளதுடன் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பதற்கும் அவர்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கும் இதைப் பயன்படுத்தலாம்.

2024 வரை இயங்கும் இந்நான்கு ஆண்டு உபாயமானது குறிப்பிட்ட விளைவுகளின் தொகுப்பை தெளிவாக வரைவிலக்கணம் செய்துள்ளது. நான்கு முக்கிய கவனம் செலுத்தும் துறைகளில் பரவியுள்ள அதன் நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் இது செயற்படுத்தப்பட்டு வருகின்றது (i) டிஜிட்டல் நிதி மற்றும் கொடுப்பனவுகள், (ii) நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் நிதி, (iii) நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் (iv) நிதியியல் அறிவு மற்றும் இயலளவு விருத்தி என்பனவாகும். முக்கிய கவனம் செலுத்தும் துறைகளின் கீழ் விரும்பிய விளைவுகளை அடைவதற்கான ஆதரவு, நிதியியல் துறைக்கான தரவு, உட்கட்டமைப்பு, கொள்கைக் கருவிகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை வழங்குவதற்கான மையச் செயற்படுத்துநர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடவடிக்கைத் திட்டத்தின் முன்னுரிமை முன்னெடுப்புகளை அமைப்பதற்கு ஒவ்வொரு கவனம்செலுத்தும் துறையினுள்ளும் மூலோபாய குறிக்கோள்கள் இனங்காணப்பட்டுள்ளன. கீழேயுள்ள வரைபடம் 03 தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கவனம்செலுத்தும் துறைகள் ஒவ்வொன்றினுள்ளும் இம்முக்கிய குறிக்கோள்களை எடுத்துகாட்டுகிறது.

மேற்கூறிய மூலோபாய குறிக்கோள்களால் வழிநடத்தப்பட்டு, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலின் நடவடிக்கைத் திட்டமானது பொறுப்பான நிறுவனம் (நிறுவனங்கள்) மற்றும் நடைமுறைப்படுத்துவதற்கான காலக்கெடுவுடன் தாக்கம்

**வரைபடம் 3: கவனம் செலுத்தும் துறைகளின் கீழான முக்கிய குறிக்கோள்கள்**

| தே.நி.வ.உ கவனம் செலுத்தும் துறை | முக்கிய குறிக்கோள்கள் |
|---|---|
| டிஜிட்டல் நிதியும் கொடுப்பனவுகளும் | 1) நாட்டின் டிஜிட்டல் பொருளாதார கொள்கையின் நிறுவனம்சார் முகாமைத்துவம்<br>2) அரசாங்கத் திட்டங்கள் மற்றும் பணிகளை டிஜிட்டல் மயமாக்குதல்<br>3) தரப்படுத்தலை உறுதிப்படுத்துவதற்கு உங்கள் வாடிக்கையாளரை தெரிந்துக் கொள்ளல் செயன்முறையை சீரமைத்தல்<br>4) இயலச்செய்கின்ற ஒழுங்குமுறைச் சூழலை உருவாக்குதல்<br>5) நிதியியல் வசதிக்குட்படுத்தல் மீது விசேட கவனம்செலுத்தி நிதியியல் தொழில்நுட்ப அமைப்பு முறைமையின் அபிவிருத்திக்கு ஆதரவளித்தல்<br>6) செல்லிட மற்றும் இலத்திரனியல் கொடுப்பனவு முறைகளின் பயன்பாட்டை விரிவாக்க அதிக கேள்வியை உருவாக்குதல்<br>7) டிஜிட்டல் கொடுப்பனவுகளின் வழங்கலை அதிகரித்தல்<br>8) டிஜிட்டல் உட்கட்டமைப்பின் அபிவிருத்தியை வலுப்படுத்துதல் |

| | |
|---|---|
| நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதி | 1) நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு கடன் வழங்குவதை அதிகரிப்பதற்கான முறையான நிதியியல் துறையின் இயலளவை விருத்தி செய்தல் அத்துடன் பசுமை மற்றும் நிலைபெறத்தக்க நிதி அதேபோன்று பெண்கள், ஏழைகள் மற்றும் குறைந்த கல்வி பின்னணியைக் கொண்ட தனிநபர்கள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய வகுப்பினர் மீது விசேட கவனம் செலுத்தி உயர்தர உற்பத்திகளை விரிவுபடுத்துதல்<br>2) அரசாங்க ஆதரவுபெற்ற நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் நிதி அணுகுமுறைகளையும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தி ஒருங்கிணைத்தல் |
| நுகர்வோர் பாதுகாப்பு | 1) இலங்கையில் வழங்கப்படும் அனைத்து நிதியியல் பணிகளையும் உள்ளடக்கிய ஒழுங்குபடுத்துநர்களுக்கான சட்டப்பூர்வ பொறுப்பாணையில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்தல்<br>2) அனைத்து வழங்குநர்கள், சாதனங்கள் மற்றும் பணிகள் முழுவதும் நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பிற்கான அனைத்தையுமுள்ளடக்கிய சட்டத் தேவைப்பாடுகளை உறுதிசெய்தல்<br>3) நிதியியல் நுகர்வோர் பாதுகாப்பு மேற்பார்வையை மேலும் வலுப்படுத்துதல்<br>4) அனைத்து நிதியியல் நுகர்வோருக்கும் முரண்பாட்டு தீர்விற்கான அணுகக்கூடிய, வசதி, சுயாதீனமான, நன்கு வளப்படுத்தப்பட்ட, நியாயமான, பொறுப்பான, உரிய நேரத்தில் மற்றும் வினைத்திறன்மிக்க வழிகளை உறுதிசெய்வதற்கு தற்போதுள்ள இறுதிப்புள்ளி கண்டறிதல் மற்றும் பதிலிறுப்பு (EDR) வழிமுறைகளை மேம்படுத்துதல் |
| நிதியியல் அறிவும் இயலளவு விருத்தியும் | 1) மக்களின் நிதியியல் அறிவின் அளவை மதிப்பிடுதல் மற்றும் முக்கிய இடைவெளிகளைக் கண்டறிதல்<br>2) நிதியியல் அறிவு முயற்சிகளின் ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்<br>3) நுகர்வோர் மத்தியில், குறிப்பாக பெண்கள், ஏழைகள் மற்றும் குறைந்த கல்வி பின்னணியைக் கொண்ட தனிநபர்கள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய வகுப்பினரிடையே நிதியியல் அறிவை அதிகரித்தல்<br>4) நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளின் இயலளவை அதிகரித்தல்<br>5) நிதியியல் அறிவிற்காக வழங்கல் வழிகளின் செயற்றிறனையும் வினைத்திறனையும் மேம்படுத்துதல் |
| செயற்படுத்துநர்: தரவு | 1) தரவு சேகரிப்பில் இணக்கமான மற்றும் ஒருங்கிணைந்த அணுகுமுறையை உருவாக்குதல் |
| செயற்படுத்துநர்: உட்கட்டமைப்பு | 1) கொடுகடன் தகவல் முறைமையை மேம்படுத்துதல்<br>2) குறிப்பாக அசையும் பொருட்களுக்கு பாதுகாப்பான கொடுக்கல்வாங்கல் கட்டமைப்பை மேம்படுத்துதல்<br>3) தகவல் தொடர்பு உட்கட்டமைப்பை மேம்படுத்துதல் (இணையச் செயற்பரப்பு, திறன்பேசி ஊடுருவல்)<br>4) தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆளுகை கட்டமைப்பை செயற்படுத்துதல் |
| செயற்படுத்துநர்: கொள்கைக் கருவிகளும் ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலும் | 1) தரவு அந்தரங்கம் மற்றும் பாதுகாப்பிற்கான சட்டக் கட்டமைப்பை இறுதிப்படுத்தல்<br>2) பணியளிக்கப்படாத பகுதிகளில் பணிகளை விரிவுபடுத்துவதற்கு வழங்குநர்களை மேலும் ஊக்குவித்தல் |

மூலம்: இலங்கையின் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம்

சார்ந்த கொள்கை நடவடிக்கைகளை இணைத்துள்ளது. அடிப்படை மதிப்பீட்டில் தடைகளையும் வாய்ப்புக்களையும் இனங்கண்டு ஆர்வலர்களின் பரிந்துரைகளினாலும் கண்டறியும் விதந்துரைப்புகளினாலும் ஆதரவளிக்கப்பட்டு, அனைத்து நடவடிக்கைகளும் ஆலோசனைச் செயன்முறையொன்றின் ஊடாக உருவாக்கப்பட்டன. மூலோபாயத்தின் முக்கிய கவனம்செலுத்தும் துறைகள் ஒவ்வொன்றின் கீழும் அதிக கவனத்தையும் வகைகூறுதலையும் ஊக்குவிப்பதற்கு இணங்கிய காலச் சட்டகத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய நடவடிக்கைகளை நடவடிக்கைத்திட்டம் எடுத்துரைக்கின்றது. எனவே, நிதியியல் வசதிக்குட்படுத்தல் வழியை முன்னேற்றுவதற்கு அனைத்து ஆர்வலர்களின் காத்திரமான ஒத்துழைப்பையும் கூட்டாண்மையையும் இது வழங்குகிறது.

தேசிய மூலோபாயமொன்றாக, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தை நடைமுறைப்படுத்தலானது அரச மற்றும் தனியார் துறையின் பரந்தளவிலான ஆர்வலர்களை ஈடுபடுத்துகின்றது. ஒட்டுமொத்த மூலோபாயமும் திட்டமிட்டபடி மேற்கொள்ளப்படுவதையும், விரும்பிய விளைவுகளை அடைவதற்குத் தேவையானதைச் சீராக்குவதையும் உறுதிசெய்வதற்கு கண்காணிப்பு,

மீளாய்வு, மதிப்பீடு செய்தல் மற்றும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலை நடைமுறைப்படுத்தலை தொடர்பூட்டுதல் போன்றவற்றுக்காக வேறுபட்ட ஆளுகை நிறுவனங்களின் முக்கிய வகிபாகங்களையும் பொறுப்புக்களையும் எடுத்துக்காட்டுவதன் மூலமாக வலுவான ஆளுகைக் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் சபையானது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான ஒட்டுமொத்த கொள்கை வழிகாட்டுதலை வழங்குவதற்கான கட்டமைப்பில் உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நாளாந்த நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்வதற்கும் தேசிய சபைக்கு வழக்கமான இற்றைப்படுத்தல்களை வழங்குவதற்கும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் முகாமைத்துவக் குழுவிற்கு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கவனம்செலுத்தும் துறைகளுக்கான ஆலோசனை மன்றமாக செயற்படுவதற்கு பணிக்குழுக்கள் நிறுவப்பட்டுள்ளன, இது கவனம்செலுத்தும் தொடர்புடைய துறைகளில் தொழில்நுட்ப நிபுணத்துவம் பெற்ற பலதரப்பட்ட ஆர்வலர்களின் உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் குழு, முகாமைத்துவக் குழு மற்றும் பணிக் குழுக்களுக்கு நிரந்தர தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஆதரவை வழங்குவதற்காக தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயச் செயலகம் இலங்கை மத்திய வங்கியில் நிறுவப்பட்டுள்ளது.

தற்போது, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாய நடவடிக்கைத் திட்டம் தீவிரமாக செயற்பாட்டிலுள்ளது. இது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயச் செயலகத்தின் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகியவற்றால் துணையளிக்கப்பட்டு முனைப்புடன் இயங்குகின்ற அதேவேளை நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடைவதற்கு ஆர்வலர்களுக்கு வசதிப்படுத்தி ஊக்குவிக்கின்றது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமை, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடைமுறைப்படுத்தலின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு வசதியளிக்கின்ற வகைகூறுகின்ற கருவியாகச் செயற்படுகின்றது. கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு முறைமையின் கீழ் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கொள்கைக் குறிக்கோள்களுடன் அணிசேருகின்ற முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் மற்றும் இலக்குகள் உள்ளடங்கலாக தேசிய பெறுபேறுகள் கட்டமைப்பொன்று நிறுவப்பட்டுள்ளது. தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிகாட்டிகளினதும் ஜி20 நிதியியல் வசதிக்குட்படுத்தல் குறிகாட்டிகளினதும் நிதியியல் வசதிக்குட்படுத்தலுக்கான கூட்டமைப்பின் மையத் தொகுதியுடன் அணிசேருகின்ற இலங்கைக்கென ஏற்கப்பட்ட தேசிய மட்ட இலக்குகளை இக்குறிகாட்டிகள் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன.

இலங்கையின் நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமானது, தற்போதுள்ள மற்றும் புதிய தரப்பினருக்கு புதிய முன்னெடுப்புகளை உருவாக்குவதற்கான வசதியினை வழங்குவதற்கு ஆற்றல்மிக்க மற்றும் திறந்த கட்டமைப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆளுகை நிறுவனங்களின் பொறுப்புகளின் பாகமொன்றாக, அரசியல், பொருளாதாரம் மற்றும் நிதியியல் துறை அபிவிருத்திகள் காரணமாக மாறிவரும் அமைப்பு முறைமையை எதிர்கொள்வதற்கு தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயம் மற்றும் அதன் நடவடிக்கைத் திட்டத்திற்கு தேவையான திருத்தங்கள் மற்றும் இற்றைப்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயமானது காலப்போக்கில் பொருத்தமானதாக இருப்பதை உறுதிசெய்வதற்கு தேசிய கொள்கை மற்றும் பன்னாட்டு சிறந்த நடைமுறைகளின் மாறுபடும் முன்னுரிமைகளுடன் உபாயமொன்று மீள் அணிசேர்ந்திருக்க வேண்டும்.

### முடிவுரை

பன்னாட்டு பின்னணியில் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் தேசிய கொள்கைத் துறையை ஆராய்வதில், நிதியியல் வசதிக்குட்படுத்தல் தொடர்பான அண்மைய கொள்கை அபிவிருத்திகள் உலகளாவிய கொள்கை முன்னெடுப்புகளுடன் கணிசமானளவில் அணிசேர்ந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அபிவிருத்தியடைந்துவரும் கட்டத்தை விடவும் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடைமுறைப்படுத்தும் கட்டம் மிகவும் சவால்மிக்கதாக இருக்கக்கூடும். சில நாடுகள் தமது மூலோபாயங்களை நடைமுறைப்படுத்துவதில் அனைத்து பொறுப்புமிக்க ஆர்வலர்களின் முயற்சிகளையும் பிணைக்க இயலாமையால் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளை அடையத் தவறிவிட்டன. இது தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் நடைமுறைப்படுத்தலுக்கு பொறுப்புமிக்க ஆர்வலர்களுக்கிடையில் பிணைப்புக் கட்டுப்பாடுகளை இனங்காண்பதை ஈடுபடுத்துகின்ற தேசிய அளவிலான முயற்சியின் அவசியத்தினை ஊக்குவித்தது. போதுமான வளங்களைப் பெற்றுக்கொள்வது, தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதை ஆதரிக்கும் மற்றொரு முக்கிய அங்கமாகும்.

நாட்டின் தற்போதைய பொருளாதாரப் பிரச்சனைகளின் தாக்கத்திற்குப் பதிலிறுத்தும் வகையில், தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தலின் நோக்கெல்லை

விரிவுபடுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள் நிதியியல் ரீதியாக மிகவும் பாதிக்கப்படக்கூடிய தற்போதைய காலகட்டத்தில், தாக்குப்பிடிக்கும் தன்மையினையும் பொருளாதார மீட்சியையும் வலுப்படுத்துவதில், குறிப்பாக நிலவும் பொருளாதார நெருக்கடியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள தேவையுள்ள பிரிவினரை இலக்கு வைப்பதில் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் வகிபாகம் இன்றியமையாததாகும். நாடு முழுவதும் நிதியியல் வசதிக்குட்படுத்தலின் முன்னெடுக்கப்படுகின்ற கொள்கை முன்னுரிமைகளுக்கு மத்தியில், பசுமை நிதியானது முக்கிய தேவையாக அங்கீகரிக்கப்பட்டு வருகின்றது. இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு மத்தியில் நிலைபெறத்தக்க மற்றும் பசுமை நிதியளித்தலை வலுப்படுத்துவது, மீட்புச் செயன்முறையில் இன்றியமையாததாக காணப்படும். இம்முன்னெடுப்புக்கள் அனைத்தையுமுள்ளடக்கிய மற்றும் நிலைபெறத்தக்க வளர்ச்சியை நோக்கிய பொருளாதாரம் மற்றும் சமூக நியமங்கள் ஆகிய இரண்டிலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கக்கூடும்.

எனினும், நிதியியல் வசதிக்குட்படுத்தல், நிதியியல் உறுதிப்பாடு மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் குறிக்கோள்களுக்கிடையில் சாத்தியமான விட்டுக்கொடுப்புகளுக்கு அதிக கவனம் செலுத்தப்பட வேண்டியிருக்கும். நிதியியல் வசதிக்குட்படுத்தலை வசதிப்படுத்துவதற்கு உலகளாவிய நியமங்களின் விகிதசமப் பிரயோகத்தை இயலச்செய்கின்ற கட்டமைப்பொன்றை உருவாக்குவது அவசியமாகத் திகழ்கின்றது. இதன்மூலம், நிதியியல் ரீதியாக ஒதுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய வாடிக்கையாளர் வகுப்பினரைச் சென்றடைவதற்கும் நிதியியல் உறுதிப்பாடு அதேபோன்று நிதியியல் ஒருமைப்பாடு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆகியவற்றுடன் நிதியியல் வசதிக்குட்படுத்தலை தொடர்ந்து முன்னெடுப்பதற்கும் நாடுகள் பல்வேறு வகையான நிதியியல் முறைமைகள் மற்றும் நிதியியல் பணிகளை வழங்குபவர்களுக்கு இடமளிக்கக்கூடியதாக இருக்கும்.

நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிக்கும் துறைகளில் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு சக நாடுகளுடன் தொடர்ந்தும் ஒருங்கிணைத்தலானது சக நாடுகள் எதிர்நோக்கிய பொதுவான பிரச்சனைகளையும் சவால்களையும் வெற்றிகொள்வதற்கு உபாயங்களைக் கொண்டு இற்றை வரையானதாகப் பேணுவதில் உதவியாக அமைந்திருக்கும். மேலும், பன்னாட்டுக் கொள்கை அரங்கில் தேசிய அளவிலான பிரதிநிதித்துவமானது நிதியியல் வசதிக்குட்படுத்தலில் தேசிய சாதனைகளை எடுத்துக்காட்டுவதற்கு ஆதரவுமிக்கதாக அமைந்து கொள்கை நடைமுறைப்படுத்துவதில் முன்னேற்றத்தை அளவிடுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும் காத்திரமானதும் வினைத்திறன்மிக்கதுமான கருவியினை வழங்கும்.

**உசாத்துணைகள்**


1) AFI, Defining Financial Inclusion, 2017: https://www.afi-global.org/wp-content/uploads/publications/2017-07/FIS_GN_28_AW_digital.pdf

2) AFI, Data Portal, 2017 https://www.afi-dataportal.org/sites/default/files/AFI_ADP_17_A5_AW_digital.pdf

3) A. Hannig A and Jansen S, Financial Inclusion and Financial Stability: Current Policy Issues ADB Working Paper Series, 2010: https://www.adb.org/sites/default/files/publication/156114/adbi-wp259.pdf

4) BSP, National Strategy for Financial Inclusion, 2021: https://www.bsp.gov.ph/Pages/InclusiveFinance/NSFI-2022-2028.pdf

5) CBSL, National Financial Inclusion Strategy of Sri Lanka, 2011: https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/NFIS%20Summary_%20English_2.pdf

6) Kelegama S, Financial Inclusion in Sri Lanka : Issues and Challenges, 2014: https://www.ips.lk/wp-content/uploads/2017/06/presentation.pdf

7) Sousa M M, Financial Inclusion and Global Regulatory Standards, CIGI, 2015: https://www.cigionline.org/sites/default/files/new_thinking_g20_no7.pdf

8) World Bank Group, G20 Financial Inclusion Indicators: https://databank.worldbank.org/data/download/g20fidata/G20_Financial_Inclusion_Indicators.pdf

9) World Bank Group, Developing and Operationalizing a National Financial Inclusion Strategy 2018 : https://sdgs.un.org/sites/default/files/publications/2688NFIS_Toolkit.pdf

10) World Bank Group, Lessons from Implementing a National Financial Inclusion Strategy, 2021: https://openknowledge.worldbank.org/bitstream/handle/10986/36213/Lessons-from-Implementing-a-National-Financial-Inclusion-Strategy.pdf?sequence=1&isAllowed=y

# இலங்கையில் படுகடன் நிலைபெறுதன்மையும் பொருளாதார வளர்ச்சியும்

முனைவர் எஸ். எச். இவந்திக்கா ராஜகருணா
மூத்த முகாமையாளர்
பொதுப் படுகடன் திணைக்களம்



படுகடன் நிலைபெறுதன்மை என்பது வலுவான, நீடித்துநிற்கின்ற அத்துடன் சமமான வளர்ச்சியை நோக்கி ஆதரவளிப்பதற்கு நீண்டகாலப் போக்கில் நம்பகமான மற்றும் தீர்ப்பனவுசெய்யத்தக்க நிலையில் அரசாங்க நிதியங்களைப் பேணுவதற்கான ஒரு அரசாங்கத்தின் இயலுமையாகும் (உலக வங்கி 2019). எனினும், உலகளாவிய நிதி நெருக்கடி அதேபோன்று கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று நிலைமை ஆகியவற்றின் பின்னர் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்துவருகின்ற இரு வகையான நாடுகளிலும் கொள்கைக் கலந்துரையாடல்களில் ஆதிக்கம்செலுத்துகின்ற முக்கிய விடயமொன்றாக படுகடன் நிலைபெறுதன்மை தோற்றம்பெற்றுள்ளது. அதிகரிக்கின்ற அரசாங்கப் படுகடனுடன் கூடிய நாடுகள் தற்போதைய கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் அரசாங்கம் மூலமான பாரிய செலவிடுதல் காரணமாக படுகடன் நிலைபெறுதன்மை கொள்கைப் பாதையிலிருந்து விலகிச்செல்வதற்கு அதிக வாய்ப்புக் கொண்டவையாகும். பாரிய வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகள் பொருளாதாரத்திற்கு தோற்றுவிக்கின்ற ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கு குறுகிய மற்றும் நீண்டகாலப் போக்கில் நிலைபேறான பொதுப் படுகடன் நிலைமைகளை எய்துவதற்கு அரசாங்கங்களுக்கு அழுத்தம்மிக்க தேவை இருந்துவருகின்றது.

**உயர்வான பொதுப் படுகடன் ஏன் கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றது?**

உயர்வான பொதுப் படுகடன் ஏன் கரிசனைகளைத் தோற்றுவிக்கின்றது என்பதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான - உயர்வான படுகடன் மட்ட விகிதமானது முதலீட்டு நிச்சயமின்மைக்கு மத்தியில், பிரதானமாக முதலீட்டாளர் நம்பிக்கை இழப்பதன் வாயிலாக உறுதியின்மையினைத் தோற்றுவிக்கக்கூடும். கடன் வழங்கத்தக்க நிதியங்களுக்கு அதிகரிக்கின்ற கேள்வி, வட்டி வீதங்கள் உயர்வடைவதற்கு அழுத்தத்தினைச் சேர்க்கக்கூடிய அதேவேளை, படுகடன் மீதான உயர்வான வட்டிக் கொடுப்பனவுகள் தனியார் முதலீடு விலகிச்செல்ல வழிவகுக்கலாம். இதன் பயனாக எதிர்கால வரிகளில் அதிகரிப்புக்கள் ஏற்பட்டு முக்கிய சமூக மற்றும் நலனோம்புகைச் செலவிடுதலைக் குறைப்பதற்கு அரசாங்கம் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தலாம். சில சந்தர்ப்பங்களில் உயர்வான பொதுப் படுகடன் மட்டங்களுடன் கூடிய அரசாங்கங்கள் பணத்தை அச்சிடுவதன் மூலம் எதிர்வினையாற்றுகின்றன இது, அதனைத் தொடர்ந்து உயர்வான பணவீக்கத்தினைத் தோற்றுவிகின்றது. உயர்வான பொதுப் படுகடன் மட்டங்கள், பொருளாதார வளர்ச்சியினை தடைப்படுத்துவதற்கும் முனைகின்றன. இதன் பயனாக, பொதுப்படுகடன் மற்றும்

வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை என்பவற்றுக்கிடையிலான "தீய சுழற்சி" உறவின் அடிப்படையில் சமனிலைப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டம் என்ற அர்த்தத்தை மிகுந்தளவில் குறைத்து மதிப்பிடுகின்றது (ராஜகருணா, சவுர்தி மற்றும் பெரேரா 2021). 1980 களில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தாராள மற்றும் சார்புச் சந்தைக் கொள்கைகளைத் தொடர்ந்தும் 1997 - 98 ஆண்டுகளில் ஆசிய நிதியியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அதனைத் தொடர்ந்து மூலதனக் கணக்கை தாராளமயப்படுதியமையினாலும் இலங்கைப் பொருளாதாரத்தின் கொள்கைச் சுழற்சிகளில் இப்பிரச்சனை அதிக கவனத்தினை பெற்றது. அரசாங்கப் படுகடன் வெளிநாட்டு மூலங்களினால் நிதியளிக்கப்படுகின்ற போது அத்துடன் பொருளாதாரத்தில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கையிழந்து தமது படுகடனை சடுதியாக விற்பனை செய்வார்களாயின், வெளிநாட்டு ஒதுக்குகள் கரைந்துசெல்வதுடன் கூடிய தாக்கம் அபரிமிதமானதாகவிருக்கும். இதனால் ஏற்படுகின்ற சென்மதி நிலுவை நெருக்கடிகள் தேசிய நாணயம் மதிப்பிழப்பதை தூண்டலாம். மறு கரத்தில், தேறிய ஏற்றுமதிகள்[1] வீழ்ச்சியடைவதன் வாயிலாக நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையினை எதிர்மறையாகப் பாதிக்கக்கூடும். இறுதியாக, ஒரு நாடு அதன் படுகடன் தீர்ப்பனவுக் கடப்பாடுகளை நிறைவேற்றத் தவறுமாயின், அது அதன் சமூகப் பொருளாதார அரசியல் கட்டமைப்பினை உலக அரங்கில் இழந்துவிடும்.

எது எவ்வாறிருப்பினும், கல்வி, போக்குவரத்து, சுகாதாரம் போன்ற பொதுச்சேவைகளின் முதலீடுகளூடாக உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு பொதுப் படுகடன் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்படுகின்ற போது ஒரு தேசத்தின் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு அது உதவுகின்றது. விசேடமாக இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் சந்தைப் பொருளாதாரங்களில் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்கும் சமூக மற்றும் நலனோம்புகை சேவைகளை மேம்படுத்துவதற்கும் பொதுப் படுகடன் அரசாங்கத்துக்கு சாத்தியமளிக்கின்றது. இதற்கு மேலதிகமாக, பொதுப் படுகடனானது குறுகிய காலத்தில் தமது பொருளாதார வளர்ச்சியில் முதலிடுவதற்கு நாடுகள் மேலதிக நிதியங்களைப் பெற்றுக்கொள்வதில் உதவுகின்றது. அரசாங்கங்கள் முதலீடுகளுக்கு நிதியிடுவதற்கு மாத்திரம் கடன்பெற வேண்டும் என்கின்ற அதேவேளை நாளாந்தம் ஏற்படுகின்ற செலவுகள் வருமான வரிகள் மூலம் சாமாளிக்கப்பட வேண்டும் என்பது எதிர்கால தலைமுறையினருக்குப் பொதுப் படுகடன் நன்மை பயக்கத்தக்கதாக இருக்க வேண்டும் என்ற இறை சார்ந்த கொள்கைத் தூண்டல்களின் மரபுசார்ந்த "பொன்மொழி" ஆகும் (குரோநெக் 2011).

பொதுப் படுகடனானது நீண்டகால போக்கில் உயர்வான பொருளாதார வளர்ச்சிக்கு இட்டுச்செல்கின்ற முதலீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்படுத்தல்களுக்கு நிதியளிக்கலாம். மேலும், அரசாங்க கடன் பெறுகைகள் பொருளாதார மீட்சிக்கு உதவியளித்து தொழிலின்மையினைக் குறைப்பதற்கு உதவலாம். எனவே, தலைமுறைகளுக்கிடையில் நன்மைகள் ஒன்றுசேர்வதனால் நடைமுறையிலுள்ள அரசாங்கங்களின் கடன்பெறுதல்களிலிருந்து அவர்கள் நன்மை பெறுவதாயினும் சரி இல்லாவிடினும் சரி மூலதனம் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளுடன் அரசாங்கப் படுகடனைத் தீர்ப்பனவுசெய்வதற்குப் பொறுப்புடையவர்கள் எதிர்கால வரி செலுத்துனர்களே. படுகடன் இயக்கவாற்றலுக்கு அமைவாக உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட தேசிய படுகடன் விரைவாக அதிகரிக்குமாயின், அதனைத் தீர்ப்பனவுசெய்வதற்கு அரசாங்க கடன்பெறுதல் உயர்வான வரிகளை வேண்டி நிற்கலாம். ஆதலால் உயர்வான படுகடன் மட்டங்கள் எதிர்காலத் தலைமுறையினரை நேரடியாகப் பாதிக்கின்றன. இவ்விடயத்தில் ஒவ்வொரு ஆண்டும் செலுத்தவேண்டிய படுகடன் மீதான வட்டி முற்றுமுழுதாகக் புதிதாக உள்நாட்டு அல்லது வெளிநாட்டுப் படுகடனை வழங்குவதன் மூலம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

படுகடன் ஒன்றுதிரள்வதன் மூலம் உயர்வான வட்டி வீதங்கள் அத்துடன் ஒப்பீட்டு ரீதியாக சலுகையல்லாத படுகடனுக்கான குறுகிய முதிர்ச்சிக் காலங்கள் என்பன காரணமாக படுகடன் தீர்ப்பனவுச் செலவும் துரிதமாக

---

1 தேறிய ஏற்றுமதிகள் குறைவடைவது (ஏற்றுமதிகளில் குறைவு மற்றும் இறக்குமதிகளில் அதிகரிப்பு) பாரிய நடைமுறைக் கணக்கு பற்றாக்குறைகளுக்கு இட்டுச்செல்லும்.

2 கடன்தீராற்றல்: அரசாங்கத்தின் வருமானத் துறையின் தற்போதைய பெறுமதியானது குறைந்தது அதன் செலவினத்துடன் சேர்த்து ஏதேனும் ஆரம்ப படுகடனின் தற்போதைய பெறுமதியினை விட பெரிதாக இருப்பின் அரசாங்கம் கடன்தீராற்றல் மிக்கதாகும்.

திரவத்தன்மை: அரசாங்கமானது ஒழுங்கான விதத்தில் அதன் முதிர்ச்சியடைகின்ற படுகடன் கடப்பாடுகளை நீடிப்பதற்கு இயலுமாயின் அரசாங்கம் திரவத்தன்மை மிக்கதாகும்.

சீராக்கல் இயலளவு: படுகடன் நிலைபெறுதன்மையானது நாட்டின் கொடுப்பனவு செய்வதற்கான விருப்பத்தினை நிர்ணயிக்கின்ற செலவிடுதல் மற்றும் வருவாய் என்பனவற்றின் சீராக்கங்களுக்கான சமூக மற்றும் அரசியல் வரையறைகள் காணப்படுகின்றன என்ற கருத்தமைவையும் உள்ளடக்குகின்றது.

உயர்வடைந்து வருகின்றது. இவை இரண்டும் வெளியீட்டு வளர்ச்சி வீதத்தினை பிரதானமாகப் பாதிக்கின்ற காரணிகளாக எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன.


**இலங்கையில் படுகடன் நிலைபெறுதன்மையும் பொருளாதார வளர்ச்சியும்**

அரசாங்கமானது விதிவிலக்கான நிதி உதவியின்றி, அல்லது படுகடனின் ஒப்பந்த நியதிகளை மாற்றம்செய்யாது அல்லது தவணைதவறுதல், மறுசீரமைத்தல் அல்லது அதீத பணவீக்கமூடாக அவற்றை இயைபற்றதாக்குதலின்றி அதன் நடைமுறை மற்றும் எதிர்கால மீள்கொடுப்பனவு கடப்பாடுகள் அனைத்தையும் முழுமையாக நிறைவேற்ற இயலுமாக இருக்குமாயின் ஒரு நாட்டின் பொதுப் படுகடன் நிலைபெறத்தக்கது எனக் கருத்திற்கொள்ளப்படுகின்றது (பன்னாட்டு நாணய நிதியம் 2022). மேலும், நிலைபெறுதன்மை ஒரு நாட்டின் கடன்தீராற்றல், திரவத்தன்மை மற்றும் சீராக்கல் இயலளவு[2] என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது.

உலக வங்கியினதும் பன்னாட்டு நாணய நிதியத்தினதும் படுகடன் நிலைபெறுதன்மை பற்றிய பகுப்பாய்வானது பல்வேறு அதிர்வுமிக்க சூழ்நிலைகளைக் கொண்ட வேறுபட்ட நிலைமைகளின் கீழ் அதன் படுகடன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கான ஒரு நாட்டின் இயலளவினைப் பிரதானமாகக் கருத்திற்கொள்கின்றது. படுகடன் நிலைபெறுதன்மையானது நாட்டின் இறைக் கொள்கையுடன் சாதகமாகவும் வலுவாகவும் ஒன்றிணைந்துள்ளது. நீண்ட காலம் இறைப் பற்றாக்குறைகளுடன் கூடிய ஒரு நாடு தொடர்ச்சியான கடன்பெறுதலூடாக நிதியளிக்கப்பட வேண்டியிருக்கலாம். முறையான வரிக் கொள்கை, அரசிறைக் கொள்கை மற்றும் செலவினக் கொள்கை என்பனவூடாக பொருளாதார வளர்ச்சியினைப் பேணிவளர்ப்பதற்கு ஆதரவளிக்கின்ற அதேவேளை, படுகடன் நிலைபெறுதன்மையினையும் பேணுகின்ற முன்மதிமிக்க இறைக் கொள்கையொன்றினைப் பேணுவது ஒரு அரசாங்கத்திற்கு எப்போதும் அத்தியாவசியமானதாகும்.


வரைபடம் 1 இல் காண்பிக்கப்பட்டவாறு, 1960 - 2020 வரை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான முதலாந்தர மிகை விகிதங்கள் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளைத் தவிர எப்போதும் முதலாந்தரப் பற்றாக்குறையினையே பதிவுசெய்து வந்துள்ளது. இவ்விரு ஆண்டுகளிலும் இலங்கை முதலாந்தர மிகையினை அடைந்த போதிலும் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை ஒருபோதும் சாதகமான தொகையினைப் பதிவுசெய்திருக்கவில்லை. அரசாங்கப் படுகடன் மீதான உயர்வான வட்டிச் செலவு இதற்குப் பெருமளவில் காரணமாக அமைந்திருந்தது. 1980களில் பொருளாதார தாராளமயமாக்கல் கொள்கைகளைத் தொடர்ந்து, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 19 சதவீதமாக இருந்த 1980இல் நிகழ்ந்த அதிஉயர்வான வரவுசெலவுப் பற்றாக்குறையுடன் முதனிலைப் பற்றாக்குறை அதிகரித்தது.

**வரைபடம் 1: முதலாந்தர நிலுவை (1960-2020)**





வரைபடம் 2இல் காண்பிக்கப்பட்டவாறு சிவில் யுத்தக் காலப்பகுதியில் ஏற்பட்ட மிதமிஞ்சிய இராணுவ செலவினத்தைப் பிரதான காரணமாகக் கொண்டு மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகிதம் 1985 - 2009 வரை தொடர்ச்சியான அடிப்படையில் உயர்வடைந்தது. வரைபடம் 3இல் காண்பிக்கப்பட்டவாறு அரசிறைகளின் வீழ்ச்சிக்கு மத்தியில் அதிகரித்த அரசாங்க செலவிடுதலின் விளைவாக 2021இல் வரவுசெலவுத்திட்டப் பாற்றாக்குறை விரிவடைந்தது. கடந்த காலங்களில் உயர்வான வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகள் அதிகரிக்கின்ற பொதுப் படுகடனை விளைவித்துள்ளன. கொவிட் 19 உலகளாவிய நோய்த்தொற்று இந்நிலைமையினை மோசமடையச்செய்து ஏமாற்றமடைகின்ற படுகடன் உறுதிப்பாட்டு

வரைபடம் 2: மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகிதம் (1960-2020)




கரிசனைகளைத் தோற்றுவித்தன. கொவிட் 19 காலப்பகுதியில் பொருளாதாரம் சுருக்கமடைதல் அதேபோன்று அதிகரித்த வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகள் காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் விகிதம் 104.6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது. மேலும், உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட நிச்சயமின்மைகளிலிருந்து தோன்றிய உயர்வான வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறைகள் ஏற்கனவே காணப்பட்ட பாரிய அரசாங்க படுகடனுக்கு வலுச்சேர்த்து இதனூடாக அண்மைய காலத்தில் இறைசார்ந்த இலக்குகளை சவாலுக்குள்ளாக்கியது. பொருளாதார வளர்ச்சியினையும் அரசிறைத் திரட்டலையும் உலகளாவிய நோய்த்தொற்று குறிப்பிடத்தக்களவு தடைப்படுத்திய அதேவேளை அழுத்தம் விளைவிக்கின்ற பொருளாதாரம் மற்றும் சுகாதாரம் தொடர்புடைய சிக்கல்களுடன் ஈடுகொடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தூண்டல் வழிமுறைகள் அரசாங்க செலவினத்தினை மேலும் கணிசமாக அதிகரித்து 2021இல் அரசாங்கப் படுகடன் தொகுப்பினை உயர்வடையச் செய்தது.


வரைபடம் 3: வரவுசெலவுத் திட்ட நிலுவை (1960-2020)




அரசாங்கம் கட்டுப்படுத்திய பொருளாதாரத்தின் கீழ் பின்பற்றப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் அத்துடன் மோசமான வானிலை நிலைமைகள் மற்றும் நாடுமுழுவதும் பாதுகாப்பினை உறுதிசெய்வதில் சில தோல்விகள் அதாவது சிவில் யுத்தம் போன்றன காரணமாக 2001இல் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் குறைவடைவதற்கு வழிவகுத்தன. மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி வீதம் 2020இல் எதிர்மறையாகவிருந்து உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கத்தினைப் பிரதிபலித்தது (வரைபடம் 4).

பல வருடங்களாக இறைசார் உறுதியின்மையுடன் இணைந்த உயர்வான பொதுப் படுகடன் மட்டமும் பொருளாதார வளர்ச்சி மீதான மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடனின் தாக்கமும் இலங்கையில் எதிர்மறையாக இருந்து வருகின்றன. பிரதானமாக தாராளமயமாக்கல் கொள்கைகள் மற்றும் சிவில் யுத்தத் தாக்கங்கள் என்பனவற்றின் காரணமாக இலங்கைப் பொருளாதாரமானது 1980 - 1990 வரையான காலப்பகுதியில் இறைசார் உறுதிப்பாடின்மை மற்றும் குறைவான பொருளாதார வளர்ச்சி என்ற இரண்டினையுமே எடுத்துக்காட்டுகின்றது. மேலும், பொருளாதார தாராளமயமாக்கலுடன் ஒன்றிணைந்து சென்ற

வரைபடம் 4: பொருளாதார வளர்ச்சி (1960-2020)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

பற்றாக்குறையான செலாவணி வீத சரிப்படுத்தல்களின் பிரதான காரணமாக சர்வதேச சந்தையில் இலங்கை அதன் போட்டித்தன்மையை இழந்தது. இதற்கு மேலதிகமாக, நலிவடைகின்ற வர்த்தக மாற்று விகிதம் பொருளாதார வினைத்திறனின்மை, ஆளுகை நெருக்கடிகள் என்பன இலங்கையில் வீழ்ச்சியடைகின்ற வளர்ச்சி வீதங்களை ஏற்படுத்தியுள்ளன.

**முன்னோக்கிய பாதை**

கொள்கை பற்றிய மேலதிக செலவினை படுகடன் மட்டம் எடுத்துக்காட்டுவதனால் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கு உயர்வான படுகடன் மட்டத்திற்கு இடமளித்தல் முன்மதிமிக்க கொள்கைத் தீர்மானம் ஒன்றாக அமையாது. படுகடன் தீர்ப்பனவு செலவினத்தினையும் பொருளாதார சவால்களையும் நிவர்த்திசெய்ய வேண்டுமாயின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான படுகடன் மட்டம் நிலைபெறத்தக்க மட்டத்தில் காணப்பட வேண்டும். மேலும், குறைக்கப்பட்ட நிதியியல் ஆதரவு (உதவு தொகைகள்) வரவுசெலவுத்திட்டத்தினுள் அரசாங்கத்தின் செலவிடுதலுக்கு நெகிழ்வுத்தன்மையினை தோற்றுவிக்கக்கூடிய அதேவேளை, உதவுதொகைகளை தேவையுடையோரை நோக்கி திசைப்படுத்தும். நீண்ட காலப் போக்கில், படுகடன் நிலைபெறுதன்மையினை அடைந்துகொள்வதற்கு இலங்கை அரசாங்கம் நிதியியல் சந்தைகளை விருத்திசெய்தல் மற்றும் கடன்பெறுதல் செலவுகளைக் குறைத்தல் என்பன மூலம் அதன் பொதுப் படுகடன் மட்டங்களை சிறப்பாக முகாமைசெய்யவேண்டும். மேலும், குறைவான படுகடன் மட்டங்களை அடைந்துகொள்ளும் விதத்தில் அரசாங்க செலவினத்தைக் கட்டுப்படுத்துவது அல்லது அரசிறை வினைத்திறனை அடைவது முக்கியத்துவம்மிக்கதாகும். ஆகையினால், எதிர்கால வளர்ச்சி நோக்கங்களுக்காக ஆற்றல்வாய்ந்த பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகளை வகுப்பதற்காக படுகடன் - வளர்ச்சி தொடர்புகளை கொள்கை வகுப்பாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

கொவிட் 19 இற்கு எதிரான போராட்டத்தில் தற்போது பாரிய சவால்களைக் கொள்கை வகுப்பாளர்கள் கையாள்வதுடன் அவர்கள் புத்தாக்கமிக்க கொள்கைகளைப் பரிசீலனையிற்கொள்ள வேண்டும். நாட்டின் பொதுப் படுகடனை நிலைபேறற்ற பாதைக்குத் தூண்டிவிடக்கூடிய பொருளாதாரத்திற்கான தாக்கம் காணப்படுகின்றது என்ற குழப்பம் காணப்படுகின்றது. இறைசாரந்த முன்மதி மற்றும் படுகடன் நிவாரண முன்முயற்சிகள் ஊடாக அவர்களது பொதுப் படுகடன் நிலைபெறுதன்மையினைப் பேணுவது முக்கியத்துவமிக்கதாக விளங்குகின்றது. எனினும், உயர்வான வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறை பொதுப் படுகடனுக்கு வலுச்சேர்ப்பதுடன் இதனூடாக படுகடன் நிலைபெறுதன்மை விட்டுக்கொடுக்கப்படுகின்றது. உலகளாவிய நோய்த்தொற்றானது பொருளாதார வளர்ச்சியினையும் வரி வருவாய்களையும் சடுதியாகக் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, கேள்வியில் ஏற்பட்டுள்ள சடுதியான வீழ்ச்சிக்கு ஈடுகொடுக்கும் விதத்தில் இறைசார்ந்த தூண்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பொதுப் படுகடனுக்கு மேலும் சுமையேற்படுத்தும். உயர்வான வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையும் உயர்வடைகின்ற பொதுப் படுகடன் மட்டமும் படுகடன் இயக்கவாற்றல்களை மேலும் சீர்குலையச்செய்து சந்தைத் தூண்டல்கள் மீது எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருக்கும்.

1948இல் சுதந்திரம் பெற்றதிலிருந்து இலங்கை வெளிநாட்டு கடன் தீர்ப்பனவில் கறைபடியாத பதிவினைக் கொண்டிருந்தது. எனினும், கொவிட் உலகளாவிய

நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரம் மோசமாகப் பாதிக்கப்பட்டு சுற்றுலாத் துறை வருவாய்களில் தாக்கம் ஏற்பட்டமை, உக்ரைன் போர் மற்றும் பண்ட விலைகள் என்பன மூலம் துண்டப்பட்ட பாதிப்புக்கள் பொருளாதாரத்தை நலிவடையச் செய்தன. இதனால் பன்னாட்டு நாணய நிதியத்தினால் ஆதரவளிக்கப்படும் பொருளாதார சீராக்க நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஒத்திசைவான விதத்தில் கடப்பாடுகளின் கிரமமான, பரஸ்பர ஒப்புதல் மறுசீரமைப்பொன்று முடிவுறாதுள்ள இடைக்காலப்பகுதிக்காக பாதிக்கப்பட்ட அனைத்துப் படுகடன்களையும் சாதாரணமாக தீர்ப்பனவு செய்வதை இடைநிறுதுதுவதற்கு அரசாங்கம் தீர்மானித்தது. மேலும், பொருளாதாரத்தின் மீது ஏற்பட்டுள்ள விசேட நிலைமையினால் ஏற்படும் வருந்துதலை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கமானது பல்தரப்பு மற்றும் இருதரப்புப் பங்காளரிடமிருந்து உதவியினை நாடுகின்றது. அதேவேளை, மத்திய வங்கி, நிதி அமைச்சு மற்றும் அரசாங்கம் என்பன வெளிநாட்டு நிதியிடலைப் பெற்றுக்கொள்வதற்கு முதலீடு மற்றும் கடன்வழங்கல் பங்காளர்களுடன் தொடர்ந்தும் ஈடுபடுவதுடன் வெளிநாட்டு நாணயப் படுகடன் தீர்ப்பனவு கடப்பாடுகளை நிறைவுசெய்வதற்கும் அர்ப்பணித்துள்ளன.

**உசாத்துணைகள்**


Arnone, M., Bandiera, L. and Presbitero, A.F., 2005. External debt sustainability: Theory and empirical evidence. Catholic University of Piacenza Economics Working Paper, 33.

Diamond, PA, 2003. National debt in a neoclassical growth model. The American Economic Review, 55, 1126-1150.

Groneck, M., 2011. The golden rule of public finance and the composition of government expenditures: a growth and welfare analysis. Journal of Economic Policy Reform, 14(4), 273-294.

Rajakaruna, I., Suardi, S. and Perera, N., 2021. On public debt and twin imbalances in the South Asian region. Applied Economics, 53(27), pp.3080-3096.

World Bank, 2019. World Development Indicators. World Bank, https://data.worldbank.org